# சின்னஞ்சிறு கதைகள்



ட்சாம்

சின்னஞ்சிறு

# கதைகள்

(முதலாம் தொகுதி)

EK/128

LIBRARY
EARLALAI WEST
CHUNNAKAM
SITHY VINAYAGAR
CC-1

ச. வே. பஞ்சாட்சரம்

வெளியீடு:
தமிழருவிப் பதிப்பகம்
கலாதேவி அச்சகம்,
சுன்னாகம்.

# CHINNANCHIRU KATHAIGAL

(Stories)

by

S. V. PANCHADCHARAM

உரிமை ஆசிரியருக்கே.

கிடைக்குமிடம்:

**ச. கிருஷ்ணசாமி**

(புத்தகம், பத்திரிகை விற்பனையாளர்)

33, பெரியகடை,

யாழ்ப்பாணம்

**முஸ்லிம் ஹோட்டல்,**

கண்டி.

**அரசு வெளியீடு,**

231, ஆதிருப்பள்ளித் தெரு,

கொழும்பு

விலை ரூபா 1-50

உ

# பதிப்புரை

கவிஞர் ச. வே. பஞ்சாட்சரம் அவர்களின் "சின்னஞ் சிறு கதைகள்" என்ற இந் நூலை வெளியிடுவதிற் பெருமைப்படுகின்றோம். "கலைச்செல்வி"ப் பத்திரிகையில் நிறையக் கவிதைகள் எழுதிக் குறுகிய காலத்தில் முன்னணிக் கவிஞராய் மலர்ந்த அன்பர், "எழிலி" என்ற தன் காவியத்திற்குச் சாகித்திய மண்டலப் பரிசான ஆயிரம் ரூபாயைப் பெற்ற பெருமைக்குரியவர். மிகச் சிறு வயதில் இப்பரிசைப் பெற்றவர் இவர் ஒருவரே என்பது குறிப்பிடத் தக்கது.

தன் கருத்துக்களை எப்படிச் சொல்ல வேண்டும்? எந்த இலக்கிய வடிவத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும்? — என்பவற்றைத் தீர்மானிக்கும் சுதந்திரம் இலக்கிய கர்த்தாவுக்கு உண்டு. நூற்றுக் கணக்கான கவிதைகள்மூலம் தமிழ் நெஞ்சங்களுடன் உறவாடிய கவிஞர், இப்போது சின்னஞ்சிறு கதைகளினால் சிந்தனையைத் தூண்டுகின்றார். ஆசிரியர் கவிஞரானபடியால், சொற்களைச் செட்டாகக் கையாண்டு, கருத்தைச் சுவையாகச் சொல்கின்றார்.

"ஈழத்துச் சிறுகதைகள்" (முதற்றொகுதி); "நல்லூர் நான்மணிமாலை". (சொக்கன்) ஆகிய நூல்களை வெளியிட்ட நாம் இப்போது "சின்னஞ் சிறு கதைகள்" என்ற இந் நூலை வெளியிடுகின்றோம். சிறந்த நூல்களைக் குறைந்த விலையில் வெளியிட வேண்டும் என்ற குறிக்கோள் எமக்குண்டு. இத்தகைய வெளியீடுகள் பலவற்றைத் தமிழ் வாசகர்கள் விரைவில் எங்களிடமிருந்து எதிர்பார்க்கலாம்.

இந்நூலை வெளியிட அனுமதி தந்த கவிஞர் பஞ்சாட்சரம் அவர்களுக்கும், அச்சிட்டுதவிய கலாதேவி அச்சகத்தினருக்கும் எம் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றோம்

— தமிழருவிப் பதிப்பகம்

மே/பா கலாதேவி அச்சகம்,

சுன்னாகம்.

# சுருங்கச் சொன்னால் ....!

கவிஞர் ச. வே. பஞ்சாட்சரம் ஈழத்தில் விரல் மடித்து எண்ணக்கூடிய சிறந்த கவிஞர்களில் ஒருவர்; சாகித்திய மண்டலப் பரிசில் பெற்றவர். கவிஞராகவே இலக்கிய உலகுக்கு அறிமுகமானவர், இச் சின்னஞ்சிறு கதைகள் எனுந் தொகுதி, இலக்கியத்தின் வேறு வடிவங்களிலும் அவருக்கு ஞானம் உண்டு என்பதை நிரூபிக்கின்றது. கவிஞரின் இத் தொகுதி ஈழத்து இலக்கிய உலகிற்கு, புதியதொரு இலக்கிய வகையை அறிமுகம் செய்துவைக்கின்றது. அந்த வகையில் இத்தொகுதிக்குப் பெருமையுண்டு.

அவசர யுகமிது; பெரிய நவீனங்களையோ, நீண்ட சிறுகதைகளையோ பொறுமையோடு படிக்கின்ற வாசகர் கூட்டம் இன்று குறைந்து வருகின்றது. சிறு சிறு விஷயங்களை விரும்பிப் படிக்கின்றவர்களே இன்று அதிகம். அதனால் எழுதப்படுகின்ற விஷயங்கள் சிறியனவாயும், அதேவேளை வாசிப்பவனின் மனதில் நல்ல தாக்கங்களை ஏற்படுத்துவனவாயும் அமைதல் அவசியமாகின்றது. 'வாசகர்களின் ரசனைக்காக எழுதக் கூடாது; எழுத்தாளன் தனது ரசனைக்கு வாசகர்களைக் கொண்டுவரவேண்டும்'— என்ற வாதம் ஏற்புடைத்தே. எனினும், வாசகர்களின் ரசனை வழி சென்று, அவர்களை எழுத்தாளனின் ரசனைக்கு மாற்றுவது நன்றாகும். கவிஞர் ச. வே. ப. இவ்வுண்மைகளை நன்கு தெரிந்து வைத்திருக்கின்றார் என்பதற்கு இத்தொகுதி சான்று பகர்கின்றது. சிறிய வடிவங்கள்; ஆழமாக மனதில் தைக்கக்கூடிய கருத்துக்கள்.

கவிஞர் ஒருவர் உரைநடையில் தமது எண்ணங்களை வரைய முயலும்போது, உரைநடையில் ஒருவகைச் செழுமையும், இறுக்கமும் ஏற்படவே செய்யும். நூறு வார்த்தைகளால் விளங்க வைக்கவேண்டிய ஓர் உணர்ச்சியை ஒரு வாக்கியத்தாலும், சில நூறு வார்த்தைகளால் விளங்க வைக்கவேண்டிய ஒரு சம்பவத்தை ஓரிரு வாக்கியங்களாலும் சிறைப்படுத்திக் காட்டக்கூடிய லாவண்யம் கவிஞருக்



குரியதே. கவிஞர். ச. வே. பஞ்சாட்சரத்தின் இத்தொகுதியில் இத்தகைய வாக்கிய இறுக்கத்தையும், செழுமையையும் காணமுடிகின்றது. கவிதையின் இனிய நாதத்தையும், உரைநடையின் ஆற்றொழுக்கையும் இச் சின்னஞ்சிறு கதைகள் ஒருங்கே கொண்டிருக்கின்றன.

இத் தொகுதியில் சமூகத்தின் சீர்கேட்டு அவலங்கள் சித்தரிக்கப்பட்டுள்ளன. குடிவெறியின் விளைவு, காதலின் தோல்வி, கழிவிரக்கம், சாதிச்சீர்கேடு, எழுத்தாளன் நிலை, வறுமையின் கொடுமை, ஒழுக்கக் கேடு முதலிய பல்வேறு உணர்வுகளும் இத்தொகுதியில் பாத்திரங்களாக நடமாடுகின்றன. வீட்டின் இல்லாமைக்குக் காரணம் குடிதான் என்பதை நன்குணர்ந்த செல்லமுத்து நிம்மதியைத் தேடிப் பழையபடி கள்ளுக்கடைக்கே செல்கிறான்!......... சமூகத்தின் அழுகின்ற மனிதர்களைத்தான் இத் தொகுதியில் நிரம்பக் காணலாம். அவர்களோடு சேர்ந்து கவிஞர் ச. வே. ப.வின் இதயமும் அழுவதைக் கேட்கலாம்.

சமூக தோய்களைச் சுட்டிக்காட்டுவதோடு ச. வே. ப. தமது பணியை நிறுத்திக் கொள்கின்றார். வாழ்க்கையின் அவலங்கள் கதைகளாகச் சித்தரிக்கப்படும்போது, அவற்றை வாசிப்போருக்கு வாழ்க்கையில் விரக்தியே எஞ்சும். புதுமைப்பித்தனின் பல சிறுகதைகளும் சமூக நோய்களை மட்டுமே படம் பிடித்துக் காட்டுகின்றன. புகைப்படக் கலைஞனல்லன் எழுத்தாளன்! நோயைக் கண்டறிந்து மருந்தும் கொடுப்பவன்தான் சிறந்த வைத்தியன்; எழுத்தாளனும் ஒருவகையில் வைத்தியன்தான்! இவ்வகையில் ச. வே. ப. சமூக நோய்களைச் சுட்டிக்காட்டுவதோடு நின்றிருக்கக் கூடாது. நோயைச் சுட்டிக்காட்டிவிட்டு வாசகனிடமே மருந்தைத் தேடவிட்டுவிடுவதிலும் ஒரு கலையழகு இருக்கத்தான் செய்கின்றது.

இத்தொகுதியிலுள்ள கதைகளுக்கு அவற்றின் குறுகிய வடிவத்தைக் கொண்டும், அவற்றின் உட்பொருளைக் கொண்டும் சின்னஞ்சிறு கதைகள் எனப் பெயரிட்டார் என்று

எண்ணத் தோன்றுகிறது. வேள்வி மயக்கம், பட்டகாலிலே ......!, மினிப்பத்தினி, இனி அவரைத் தேவையில்லை எனும் கதைகளை நோக்கும்போது அவை தம்முள் கொண்டுள்ள பொருளின் இறுக்கம் கருதியே சின்னஞ்சிறுகதைகள் எனப் பெயரிட்டார் என்று எண்ணத் தோன்றுகின்றது. பட்ட காலிலே..., மினிப்பத்தினி இனி அவரைத் தேவையில்லை எனும் கதைகள் இத்தொகுதியின் பெயருக்குச் சிறந்த இலக்கணமாக அமைகின்றன.

கவிஞர் ச. வே. ப. தமிழிலக்கியத்திற்கு நல்லதொரு பணியைச் செய்திருக்கின்றார். இத்தொகுதியைப் படிப்போர் தக்கதொரு கவிதை நூலையும், சிறந்ததொரு சிறுகதைத் தொகுதியையும் படித்த நிறைவைப் பெறுவார்கள் என நம்புகின்றேன். கவிஞரின் பணி தொடர வாழ்த்துகின்றேன்.

2/1, முதலாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். ‘செங்கை ஆழியான்’
26–11–69



# கதையோடு கதையாக...!

ஈழத்துத் தமிழ் வாசகர்கள் தரத்தாலும் தொகையாலும் கடந்த பத்தாண்டுக் காலத்தில் எவ்வளவோ முன்னேறி விட்டார்களென்பது மகிழ்ச்சிதரும் உண்மை.

ஒரு சமூக இலக்கியத்தின் வளத்திற்கு அச்சமூகத்தின் பொருள்நிலை அரசியல்நிலை பண்பாட்டுச் சிறப்பு கல்வி வளர்ச்சி பாரம்பரியப் பழக்க வழக்கங்கள் நம்பிக்கைகள் என்பன காரணமாக இருப்பினும், இலக்கிய ரசிகர்களின் பாராட்டுக்களே இலக்கிய வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக அமைகின்றன. தமிழரிடையே முடியாட்சிக் காலத்தில் மன்னரும், அந்நியராட்சிக் காலத்தில் வள்ளல்களும் இலக்கிய ரசிகர்களாக அமைந்து பாடும் புலவரின் கவிதைகளை நயந்தும் வியந்தும் பரிசில் பல பயந்தும் இலக்கிய வளர்ச்சிக்கு ஊக்கமளித்து வந்தனர். ஆனால் மக்களாட்சி மலர்ந்துள்ள இற்றை நாட்களில் பொதுமக்களுள் பெருகியுள்ள வாசகர்களே எழுத்தாளர்களைத் தகுதி அறிந்து பாராட்டி ஊக்கிவருகின்றனர்.

ஆனால்கடந்த நூற்றாண்டின் முற்பகுதிவரை தமிழிலக்கியம் அகப்பொருள் புறப்பொருள் இலக்கண வரம்புகளுக்குட்பட்ட தனிப்பாடல்கள், காவியங்கள், சிற்றிலக்கிய வகைகளான பிரபந்தங்கள், புராண இதிகாசங்கள் என்பவற்றைக் கொண்டதாக மட்டுமே விளங்கி வந்தது. பிற்பட்ட காலத்திலோ பிறநாட்டு நாகரிகங்கள் பண்பாடுகளின் தொடர்பு காரணமாக, நாவல், சிறுகதை, உருவகக்கதை, குட்டிக்கதை, நிமிடக்கதை போன்ற கதைவடிவங்களும் வசன கவிதை என்னும் கவிதைவடிவமும் நவீன விமர்சனக் கலையும் புதிதாகத் தமிழில் வந்து புகுந்ததோடு, சமுதாய மாற்றங்கள் காரணமாக இலக்கியப்பொருண் மரபும் திரிந்து விட்டது. பலதரப்பட்ட கொள்கைகளின், கோட்பாடுகளின் அடிப்படையில், விரிந்த பொருட்பரப்பிலிருந்து விரும்பிய விரும்பிய கருப்பொருட்களை எழுத்தாளர்கள் எடுத்தாண்டு புதிய புதிய போக்குகளில் இலக்கியம் படைக்கத்

தொடங்கிவிட்டனர். அதனால் சுருங்கிய நன்கறிந்த பொருட்பரப்பிலிருந்து, வழிவழி வந்த மரபின் நெறிப்பட பண்டைய புலவர்களால் ஆக்கப்பட்ட சங்கத்தமிழிலக்கியங்களிலிருந்த வழுவின்மை, செறிவு, வளம், இறுக்கம் என்பவை பிற்கால இலக்கியங்களில் குறைவுபடுகின்றன.

பிறமொழி இலக்கியங்களின் வளர்ச்சிக்கு ஈடுகொடுத்து இலக்கிய இரசிகர்களின் விருப்புக்களை நிறைவுறுத்தி, நமது சமூகத்தின் மாற்றங்களைப் பிரதிபலித்தும் விமர்சித்தும் கொண்டு தமிழிலக்கியமும் முன்னேற வேண்டியிருப்பதாலும், வேறும் பல காரணங்களினாலும் இந்நிலை தவிர்க்கமுடியாத ஒன்றாகிவிட்டது.

இதனால் தப்பும் தவறும் விரவித்தோன்றும் இன்றைய இலக்கியங்கள் செப்பனிடப்பட, செம்மைபெற இலக்கிய விமர்சனப்பணி எங்கும் போல் இங்கும்வேண்டப்படலாயிற்று. இன்று ஈழத்திலும் தமிழிலக்கியம் குறிப்பிடத்தக்க வகையில், தமிழக எழுத்தாளர்களும் ஒப்புக்கொள்ளும் விதத்தில் வளர்ச்சியுற்றிருக்கிறது என்றால் அதற்குக் காரணம் தரமான வாசகர்களாலும் சக எழுத்தாளர்களாலும் பத்திரிகைகளாலும் இங்கும் விமர்சனப்பணி நேர்மையாக, நிதானமாக துணிகரமாகச் செய்யப்பட்டு வருவதேயாகும்.

மனிதனை வையத்துள் வாழ்வாங்கு வாழ்வித்தல், அதன் மூலம் தெய்வத்துள் வைக்கப்படுவித்தல் என்ற இந்த இரண்டு கொள்கைகளிலும் நம்பிக்கை கொண்ட ஒரு வகையினர், ஒவ்வொன்றில் மட்டுமே நம்பிக்கையுடைய இரு வகையினர், மேலும் வாழ்வாங்கு வாழ்வது என்பதற்கும் வெவ்வேறு அர்த்தங்கள் கொள்ளும் பல்வேறுவகையினர் வாழ்வாங்கு வாழப் பல்வேறு வழிகள் காட்டும் பலவகையினர், சமுதாய முன்னேற்றத்தில் எவ்வித அக்கறையுமின்றித் தம்பிரபலத்திற்காக மட்டும் எழுது கோல்பிடிக்கும் தற்குறிவகையினர் இப்படிப் பலதரப்பட்ட எழுத்தாளர்களை இங்கும் காணலாம்.

ஆயினும் பல்வேறுதரப்பட்ட நம்பிக்கைகள், நோக்கங்கள் கொண்ட பல்வகை எழுத்தாளர்களுள்ளும், மனிதாபிமானம், இனப்பற்று, நாட்டுப்பற்று, பொதுநலத் தாகம் போன்ற உணர்ச்சிகளில் ஊறிய எழுத்தாளர்கள் படைக்கும் அழகும் சுவையும் பொலிந்து பண்பட்ட ஆழமான இலக்கியங்களை ஈழத்து வாசகர்களும் வரவேற்கிறார்கள்; நூல்வடிவில் வெளிவரும்போது அவற்றைப் பணம் கொடுத்து வாங்கிப் படிக்கிறார்கள். அண்மைக்காலத்திலிருந்து ஏராளமான



இலக்கிய நூல்கள் இங்கு வெளிவந்து விற்பனையாகிக் கொண்டிருப்பதே இதற்குத் தகுந்த சான்றாகும்.

இங்கு போதுமான அளவு இலக்கிய ஏடுகள் இல்லாமையால் இதுவரை மெல்ல மெல்ல வளர்ந்து வந்த தமிழிலக்கியப் பயிர் நமது நாட்டு நூல்களையும் பணங்கொடுத்து வாங்கிப் படிக்க நம்மவர்கள் தொடங்கியதைத் தொடர்ந்து திட்டவட்டமான, வளமான, துரிதமான வளர்ச்சியைக் காணத் தொடங்கிவிட்டது மேலும் வாசகர்களிடையே தோன்றியுள்ள இவ்விழிப்பு சுதந்திரமாக, தனித்தன்மையோடு எழுதப்பட்ட இலக்கியங்சள் நேரடியாக நூலாக்கப்படவும் இலக்கியத்தின் புதுப்புது வடிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டு நூலாக்கப்படவும் நிச்சயம் வழிவகுக்கும் என்பது என் நம்பிக்கை. வாசசர்கள் அடைந்துள்ள இந்த முன்னேற்றம் ஈழத்தில் இலக்கியம் அடையப போகும் முன்னேற்றத்தின் சிறந்த அறிகுறியாகும்.

எனது இந்நூலில் இடம்பெறும் சின்னஞ் சிறுகதைகள் சிறுகதை உத்திகளைக் கையாண்டு, குட்டிக்கதைகளிலும் சற்று நீண்டவையாக, ஆனால் குட்டிக்கதைகளில் காணமுடியாத உணர்ச்சிக் கலப்பை உள்ளுறுத்து, வலிவான தெளிவான கருக்களை மையமாகக்கொண்டு அளவான வார்த்தைகளில் அத்தியாவசியமான கருத்துக்களை கவிதைச் செறிவோடு எடுத்தியம்பி ஆக்கப்பட்டவை. இவ்விலக்கிய வடிவைப் புதிதாகத்தொடங்குவதற்கும்,வலுப்படுத்துதற்கும்மேற்கொண்ட முயற்சியாக இந்நூலை நான் தயாரிக்கக் காரணங்கள் இரண்டு ஒன்று இன்றைய இலக்கிய விழிப்பை இக்கட்டத்தில்வைத்துக் கௌரவிப்பதன் மூலம் அதனை நிலைநாட்டலும் பரவிடச் செய்தலுமாகும். மற்றது, மக்கள் தொகைகுறைந்த ஈழத்தமிழ்ச்சமூகத்தவருள் அனேகமாக எல்லாரையும் இலக்கிய இரசிகர்களாக மாற்றிடப் பொருத்தமான, மலிவான ஓர் இலக்கியவடிவத்தைக் கண்டு பிடிக்க வேண்டும் என்ற வேணவா எனலாம்.

இந்நூலை வெளியிடும் தமிழருவிப் பதிப்பகத்தாருக்கும், இக்கதைகளை எழுதத் தொடங்கியபோது பாராட்டி ஊக்கிய கண்டி ஆசிரிய நண்பர் மா. சாம்பசிவத்திற்கும் சிறுகதை எழுத்தாளர் ஸ்ரீரங்கனுக்கும் முன்னுரை எழுதிய நண்பர் செங்கை ஆழியானுக்கும் என் நன்றிகள் என்றும் உரியன.

"வேல் மனை"
இணுவில் மேற்கு,
இணுவில்.
1-12-69

— ச. வே, பஞ்சாட்சரம்

# கதை வரிசை


1. வேள்வி மயக்கம்
2. அகல் விழி
3. கவலை ஈன்ற கவலை
4. ஆனந்தப்படு!
5. ஒருமுறை பாடுங்கள்!
6. அந்தப்பிரார்த்தனை
7. பட்டகாலிலே......!
8. சாதியே நீ சாகாயோ?
9. சத்தியம் செய்த சதி
10. மினிப் பத்தினி
11. சிரிப்பாயிருக்கடி!
12. எழுத்தின் வலிமை
13. விறகைப் பொன்னாக்கி!
14. மதமாற்றம்
15. இனி அவரைத் தேவையில்லை!
16. பங்காளிகள்
17. ஏழை நெஞ்சே......!
18. இதயத்தால் வாழ்ந்தவர்கள்
19. வேண்டாம் சார்!
20. குணம் சாய்ந்து போனால்......!
21. மிருகம், மனிதன், தெய்வம்!





22. தண்டல் காரர்களா?
23. இன்றையும் அழித்த நாளை!
24. செக்குமாடு, மக்கு மண்டை!
25. இப்படியும் ஒருபெண்
26. உனக்காக உயிர் வாழ்வேன்!
27. நாமார்க்கும் குடியல்லோம்
28. பெண்கேட்க வரவில்லை
29. கர்மவீயாதி
30. நூறுபாப்பு நிலம்
31. ஆனந்த ரகசியம்
32. ஈடில்லாத்தாயன்பு
33. மனிதப்பண்புகள்
34. ஆனந்தக்கண்ணீர்
35. மரணப்பிடி
36. தெரிந்தும் தெரியாமலும்!
37. கவலையே நீ வாழ்க!
38. இடியும் மின்னலும்!
39. கண்கள் உறங்காவே!
40. பேச்சுப் பல்லக்கு......!
41. யோடா?
42. பழக்கங்கள்.
43. பட்டினித்தினங்கள்
44. அந்த ஒரு சொல்
45. மானங்காக்கும்மண்

# 1. வேள்வி மயக்கம்!

மேனி முழுதும் ஆயிரமாயிரங் கங்கு மட்டைக் கரங்களை நீட்டிக் கொண்டு, செம்புழுதியில் குளித்துப் பசுமை மங்கிய ஓலைகளோடு நிற்கும் பனைவடலிகளின் நடுவே தனிமையில் உறங்கும் அந்த ஓலைக்குடிசையில் செல்லன், பொன்னி இருவருமே மரணவெறியில் சுதந்திரமாக ஏதேதோ செய்து எதை எதையோ எல்லாம் உளறிக் கொட்டிவிட்டு கிடந்த கிடத்த பாட்டில் உறங்கி விட்டார்கள். அன்று அவ்வூர்ப் பத்திரகாளி கோவிலில் வேள்வி! ஆட்டுத்தலைக்குழம்பும் குடல் சொதியும் சாராயமும் பனங்கள்ளும் நடுப்பகல் ஒருதடவையும் இரவு ஒருதடவையுமாக அவர்கள் வயிறுகளை நிரப்பின. பிறந்தமேனியும் துறந்த நாணமும் இறந்த தூக்கமுமாக அம்மா அப்பா கிடக்கிறார்களே என்ற கவலை அந்த ஒன்றரை வயதுக்குழந்தைக்கு இருக்கவில்லை. வழமையான எட்டுமணி வரும் வரை அதற்குத்தூக்கம் வரவில்லை. குதலைக் குழறலெழுப்பி விளையாட்டுணர்வோடு கண்களைச் சுழற்றிக் குடிசையை நோட்டம்விட்டபோது வழமையாகச் சுவர்மாடத்தில் ஏறிஉட்கார்ந்து கொள்ளும் தகரக் குப்பி விளக்கு தரையில் கிடந்து சுடர்த்தலையாட்டுவது கண்ணில் பட்டுவிட்டது. தேன்குடத்துள் குதிக்கும் வண்டின் ஆனந்தக் குதூகலத்தோடு விளக்கை நோக்கித் தவழ்ந்து சென்ற குழந்தை அதை எட்டிப்பிடிக்கமுயன்ற போது அதுதட்டுண்டு நிலத்தில் வீழ்ந்து மண்ணெய் குபீரென்று சரிந்தது. குழந்தை மகிழ்ச்சியோடு மண்ணெய் வெள்ளத்திலமர்ந்து, கையால் சளுக் சளுக் கென்று தட்ட, மண்ணெய் பறந்து பளிங்கு மேனியை நனைக்க தீ பரந்தோடி அந்தக் குழந்தையைச் சூழ்ந்து பற்றிக் கொள்ள குழந்தை அலறித்துடித்து விழுந்து புரண்டு கைகால்களை நிலத்தில் பட படவென அடித்து .....இவையெல்லாம் சிலநிமிடங்களுள் நடந்து விட்டன. வெறிமயக்கத்தில் பிணங்களாகக் கிடந்த செல்லனும் பொன்னியும் அருண்டு விழித்தெழும்ப முயன்றும், முடியாமல், மயக்கத்தில் மீண்டும் நிலத்தில்சாய, கருகிச் சுருண்ட குழந்தையின் தலையும் சாய்ந்து அடங்கிற்று,

★



# 2. அகல் விழி

கவிதைகள், காவியங்கள், நாவல்கள், நாடகங்கள், சிறுகதைகள் திறனாய்வுகள் இப்படி ஆயிரம் ஆயிரமாக எழுதிக் குவித்துக் கொண்டிருக்கும் நான் இத்தனை பெருமைக்கும் ஆளானதே ஒரு சுவையான வரலாறு. அன்று வேலையிலிருந்து விலகிச் செல்ல இருந்த அந்த நெசவு நிலைய நிர்வாகி பழனியப்பன் தன் சட்டைப் பையிலிருந்து என்னை உருவி எடுத்து அன்புடன் முத்தமிட்டு எதிரில் நின்ற அகல் விழியிடம் கொடுத்தபோது இரு கைகளாலும் வாங்கிக் கொண்ட அந்த அழகி, பழனியை அன்பொழுகப் பார்த்துக் கொண்டே என்னை முத்தமிட்டாள்! "அகல் விழி! நான் எங்கு சென்றாலும் என் இதயம் இந்தப் பேனா வடிவில் உன்னுடனே இருக்கும்."

இருவரும் கண்ணீரோடு பிரிந்தனர். அகல்விழி அன்று முழுவதும் தன் வீட்டில் என்னை முத்தமிடுவதும், கண்ணீரால் கழுவுவதுமாக இருந்தாள். சுவாமிப்படத்தின் அருகே இடந்தந்து கடவுளையும், என்னையும், சேர்த்து வணங்கி வந்தவள், உண்மையில் என்னையா வணங்கினாள்? அவள் அடிக்கடி என்னுதவியால் பழனிக்கெழுதிய கடிதங்களின் சிலவரிகள் எத்தனை உருக்கமானவை. "மூன்று நிமிடம்கூட உங்களைப் பிரிந்திருக்க முடியாமல் தவிக்கும் நான் மூன்று வருடங்கள் எப்படிப் பிரிந்திருக்கப் போகிறேனோ!" "வாரத்தில் ஆறு நாட்களாவது கடிதம் எழுதுங்கள் அத்தான்." "என்றுதான் இருவரும் நிம்மதியாகத் தூங்கப் போகிறோமோ!" "மனவேதனையோடு மார்புவலி வேறு பிடித்து விட்டது. நான் வேலைக்குப் போவதில்லை" "படுத்த படுக்கையாகக் கிடக்கும் என்னை நீங்கள் சிறைமீட்க உடனே வராவிட்டால் என்ன ஆகுமோ......!" "இத்துடன் தங்களுக்கு எனது ஞாபகமாக ஒரு டசின் கைக்குட்டைகள் அனுப்புவிக்கின்றேன். என்னை நிரந்தரமாகப் பிரிய நேர்ந்து தாங்கள் பெருக்கப்போகும் கண்ணீரைத் துடைக்க இவைகள் போதாதென்பது தெரியும். நான் என்ன செய்வேன்!" "இத்துடன் தங்கள் பேனா—இல்லை இரண்டு இதயங்கள்

அனுப்புகிறேன். மறு பிறவியில் என்றாலும் இணைவோமா?" இப்படியெல்லாம் சாகக்கிடந்து எழுதிய அக[illegible] இறுதியில் என்னைப் பழனிக்குத் தபாலில் அனுப்பிவிட்டாள். மணமாகாத ஐந்து தங்கைகளின் அண்ணனான பழனி என்னை இருகைகளாலும் நெஞ்சோடணைத்துக்கொண்டு வீட்டுள் கதறிப்புரண்டு விழுந்தழுதான். கண்ணீர் பாயுங் கண்களால் என்னை அடிக்கடி பார்ப்பதும் பெருமூச்சு விடுவதுயாக இன்றுவரை துயர்ப்படும் பழனி சிலசமயங்களில் ஆவேசத்தோடு காகிதக் கட்டுகளைப் பிரித்து என்னை எடுத்து அசுரவேகத்தில் சறசறவென்று ஏதோ கிறுக்குகிறான். இலக்கியக் குழந்தைகள் ஆம் உலகுக்கு இன்பம் தரும் நிரந்தர மழலைச் செல்வங்கள் அவன் துன்பத்தில் பிறந்த வண்ணமிருக்கின்றன.

★

## 3. கவலை ஈன்ற கவலை

ஆசை அருமையாகப் பெற்று வளர்த்த ஒரே மகன் திடீரென ஐந்து வயதில் இறந்துவிட்டான். மகன் இறந்த இழப்பைத் தாங்க முடியாத துயரினால் படுத்த படுக்கையான நாகம்மாள் எலும்புந் தோலுமாகி அதன்பின் எழுந்திருக்கவே இல்லை, வழமைபோல் இந்த இரவும் 2 மணியானபின்தான் உறக்கத்தில் கலந்துள்ளாள். தம்பித்துரைக்கு இன்னும் தூக்கம் வந்தபாடில்லை. மகனின் பிஞ்சுமுகம்! கலகலசிரிப்பு! அவன் தாமரைக் கைத்தழுவலில் ஏற்படும் மேனிச்சிலிர்ப்பு!—பழைய ஞாபகங்கள் மனதில் கடைவிரிக்க அவன் பெருமூச்சோடு எழுந்து வெளியே வந்தான். அந்த வாடகைவீட்டின் மறு பாகத்தில் குடியிருக்கும் நண்பன் மணியை அழைத்தான். கதவைத் திறந்து கொண்டு "என்ன? தம்பித்துரையா? இன்னும் தூங்கவில்லையா?" என்று தூக்கக் குழப்பத்தோடு வெளியில் வந்தான் மணி! "இல்லையடா! இப்படி எத்தனை இரவுகள்!" என்ற தம்பித்துரையை இடைமறித்து, "உனக்கு ரொம்ப இளகிய மனசப்பா! ஏன்டா! இன்னொரு பிள்ளையைப் பெற்றால் எல்



லாய் சரியாகி விடுமே!" என்றான் மணி! "அதற்கு என் மனைவி லாயக்கில்லையடா! பிள்ளை இறந்த துயரால் அவளைப் பரிகரிக்கத் தவறிவிட்டேன்! அதனால் அவளும் இறவாத பிணமாகிவிட்டாள்!" "என்று தம்பித்துரை நெடுமூச்செறிந்தான். "நீகுடிக்கப் பழகென்றாலும் கேட்கிறாயில்லை! சரி தூக்கம் தேவையானால் என்னோடு வா!" என்ற மணி முன்னே நடந்தான். நள்ளிரவின் அரையிருளில், மணியின் கையிலிருந்துபத்து ரூபா நோட்டொன்று தெருவோரத்து ஒரு வீட்டின் கதவுளிருந்து வெளியே நீண்ட ஒரு மென்தளிர்க் கரத்துக்குமாற தம்பித்துரை உள்ளே கரம்பற்றி இழுக்கப்பட்டான். மணி வந்த வழியில் திரும்பி நடந்தான்.

சில நிமிடங்களில், சோர்ந்து தொங்கும் தலையோடு தம்பித்துரை கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்த பொழுது...... "உங்கள் அவசரத்தால் நான் ஆபத்தில் மாட்டிக்கொண்டேன்" என்ற பெண்குரல் அவமதிப்பு! அதன் அர்த்தம்?

அந்த இரகசிய விலைமாது இருநூற்றெண்பது நாட்களில் ஒரு பெண்குழந்தைக்குத் தாயாக நேர்ந்துவிட்டது. இறந்த பிள்ளைக்காக அழுத தம்பித்துரை பிறந்தபிள்ளைக்காகவும் அழநேர்ந்து விட்டதே! ஆமாம் அவன்க இரத்தத்தில் பிறந்த மகள் அவனது பாசத்துக்குரிய குழந்தை ஒரு வேசி மகள் அந்தச் செல்லக் குழந்தை உலகத்தால் வேசிமகள். என்று இகழப்பட்டு ஒதுக்கப்பட்டு இதயம் புண்பட்டு நாளை அவளும் வேசியாகி...... தம்பித்துரை நடந்ததை எண்ணி மிகவும் கவலைப்பட்டதன் பலனாகப் புதிய கவலையும் சேர்ந்து கொண்டு விட்டது.

★

## 4. ஆனந்தப்படு

நாற்புறமும் பசியமலைகள் அரண்செய்ய நடுவில் பள்ளத்திலே பரந்து விரிந்து வெள்ளமும் சேறுமாக, வரம்புகளுக்கிடையில் துண்டு துண்டாகக் கிடந்த அந்த வயல் வெளியின் நடுவில் வைக்கோல் வேய்ந்த மூங்கிற்குடிசை! கமத்தொழிற் பகுதிக்குச் சொந்தமான அந்த வயலின் பராமரிப் பாளனாக வந்திருந்த பாஸ்கர், குடிசைவாயிலில் "அடே காலிப்பயலே வாவெளியே! தெருவில் போகும் பெண்பிள்ளைகளோடு கல்யாணப் பேச்சா பேசுகிறாய்?" என்ற கூக்குரல்

கேட்டு, கையில் தடியொன்றோடு முற்றத்திற்கு வந்தான். அங்கே நான்கு இளைஞர்கள் குழுமிக் கொண்டு நின்றனர். வயல் வெளிக்கப்பால் மலை உச்சியில் அவள்—ஆம்! அவன் மலர் சினத்தில் சிவந்துருளும் விழிகளோடு நிற்பது தெரிந்தது.

நொடிப்பொழுதில் அந்த இளைஞர்கள் தன்னைச் சூழ்ந்து கொள்ள முற்படுவதைக் கண்டு திடீரென்று கம்பை வேகமாகச் சுழற்றத் தொடங்கினான் பாஸ்கர். அவனை அணுகமுடியாமற் போனதோடு, அடிவாங்காமல் தப்பினாலே போதும் என்ற நிலை ஏற்பட்டு இளைஞர்கள் வயல் வரம்பில் வழுக்கி விழுந்தெழுந்து ஒருவரையொருவர் தள்ளிக் கொண்டு ஓடத் தொடங்கியபோது "ஏ! நில்லுங்கள்!" என்ற ஆணைகேட்டு அச்சத்தோடு நின்று திருப்பிப் பார்த்தனர். "நான் உங்களை அடிக்கமாட்டேன், நீங்கள் என் அன்புக்குரியவளின் அண்ணன்மார் என்பதற்காக" என்று கத்திய பாஸ்கர் மலர் நின்ற மலைப்பக்கம் திரும்பிச் சத்தம் போட்டான்: "இதோ மலர்! உன் அண்ணன்மாரிடம் நான் அடிவாங்க வேண்டும் என்றுதானே அவர்களை அனுப்பினாய்! சரி! நான் அடிபடுகிறேன்! நீ பார்த்து ஆனந்தப்படு" கையிலிருந்த தடியை அவள் அண்ணன்மார் பக்கம் விட்டெறிந்து "அடியுங்கள் என்னை!" என்று பொருமலோடு கைகளை உடலோடு சேர்த்துச் சிலையென நின்றான் பாஸ்கர்.

ஆத்திரமும் அவமானமுமாக நின்ற இளைஞர்களில் ஒருவன் தடியை எடுத்துக்கொண்டு பாய்ந்து வந்து பாஸ்கரின் தலையில் தடாலென்று ஓங்கி அடித்தான். இரத்தம் பீரிட்டுப் பாய்ந்தது மலரின் கண்ணுக்கும் தெரிந்தது. அவன் மீண்டும் மீண்டும் அடித்தான். திடீரென்று "ஐயோ அண்ணா! நிறுத்தண்ணா" என்று கதறித்துடித்து அங்கேயே விழுந்த மலர் மலைச் சாரலில் உருண்டுருண்டு வந்துவயற் சேற்றில் விழுந்து எழுந்து வரம்புவழியே தள்ளாடி ஓடி வந்தாள். இரத்த வெள்ளத்தில் மயங்கிக்கிடந்தபாஸ்கரின் உடம்பின் மேல் விழுந்து "ஐயோ பாஸ்கர்! என்னை மன்னியுங்கள் நான் பாவி! சண்டாளி" என்று கத்திக் கதறிப் புரண்டாள். அண்ணன்மார் கையிலிருந்த தடி நழுவிவிழ, கண்ணீர் பெருக, திகைத்து நின்றனர்.

★



# 5. "ஒருமுறை பாடுங்கள்"

சினிமா இரண்டாம் ஆட்டம் முடிந்து பரமசிவம் வந்து படுக்கையில் விழுந்த பொழுது நேரம் இரவு ஒன்றரை மணி. திடீரென்று அவன் அறையின் தாளிட்ட கதவு தட தட வெனத் தட்டப் படும் சத்தம். அலுப்போடு எழுந்து வந்து கதவைத் திறந்தவன் முன் பயங்கரமான, அருவருப்பூட்டும் ஒரு பெண்ணுருவம்,! மூச்சே நின்று விடும்போலிருந்தது அவனுக்கு.

"பரமசிவம்! என்னை மன்னித்து ஒரு தடவை அந்தப் பாட்டைப்பாடுங்கள்!" அந்த உருவம் அவனைக் கெஞ்சி வேண்டிற்று. ஆயிரமாயிரம் உணர்ச்சிகள் நெஞ்சில் அலைமோத, "என்ன? லில்லியா?" என்று அதிர்ந்தவன் கண்முன் பத்து வருடங்களுக்கு முன் ஒருநாள்: "சார் நாடகத்தில் உங்கபாட்டு ரொம்ப நல்லாயிருந்துது சார்! வேறுபேர்களும் சொன்னாங்க ......"லில்லிமலர் அவனை வாஞ்சையோடு பார்த்துநிற்கிறாள். பக்கத்து வீட்டிலும், அவனிதயத்திலும் ஒரேகாலத்தில் மலர்ந்திருந்து அடக்கமான நல்நடத்தையால் அவன் கண்களுக்குப் பவித்திர தேவதையாகி, கோடிவகை அழகுகளை, இனிமைகளை அவன் நெஞ்சில் நிரப்பி,எக்காலத்துமில்லாதபடி அவன் குரலைக் கனிவித்து அற்புதமாகப் பாடவைத்த லில்லி மலர் முதல்நாள் நாடகவிழாவில் அவனுக்குள்நின்று, பாட்டு என்ற பெயரில் தேன்மழையை ஆயிரமாயிரம் செவிகளில் பொழிவித்த அந்த லில்லிமலர், அவனைப் புகழ்ந்து நிற்கிறாள்.

"நான் பாடினேனா? நீங்கள் பாடினீர்களா?" என்று பரமசிவம் கேட்டதற்கு அவள் அன்பு பொங்கும் விழிகளை அகல விரித்து அவனைப் பார்க்கிறாள். தொடர்ந்தும் அவன் "என் லில்லிக்கு நன்றாயிருந்தாலே போதும்!" என்றபோது அவளுக்கு மகிழ்ச்சிப் போதையில் தலை கால் தெரியவில்லை. அன்று முதல் அந்தச் சோடியின் சிரிப்பொலியால் பூங்காக்கள், ஆற்றங்கரைகள், அருவிப்பாறைகள், கலகலக்கின்றன. அன்றொரு நாள்! தேவாலய வாசலில், தொழுகையிலிருந்து திரும்ப

வேண்டிய லில்லிக்காகப் பரமசிவம் காத்து நின்ற போது, அவள் ஒரு வாலிபனுடன் சிரித்துப் பேசிக் கொண்டே வந்த விதம் அவன் இதயத்தைச் சிதறடித்து அவன் ஆன்மாவின் குரலை அழித்து...... அவன் பித்துப் பிடித்தவனாகித் தன்னை மறந்து வெகுதூரம் எங்கோ ஓடுகிறான். அதன் பின் அவனால் பாடவே முடியவில்லை. இது நடந்து இன்று பத்து ஆண்டுகள் ஆகிவிட்டன. லில்லியின் அந்த ஒரே வேண்டுதலை நிறைவேற்றத்தான், பாடத்தான் எண்ணினான் பரமசிவம். ஆனால் உள்ளத்தில் உருக்கம் பிறக்கவில்லை. நாவசைய மறுத்தே விட்டது. வெகுநேரத்தின் பின் "பாடமாட்டீர்களா?" என்று ஏமாற்றத்தோடு கதறிய லில்லி பேய் பிடித்தவள் போலத் திரும்பி ஓடி, சற்றும் எதிர்பாராத விதமாக தெருவில் வந்த லொறி ஒன்றில் மோதுண்டு இரத்த வெள்ளத்திடையே துடி துடித்து...... அவள் தலை சாய்ந்துவிட்டது. விரக்தியோடு திகைத்துச் சிலையாகி நின்ற பரமசிவத்தின் கண்கள் ஆறாகி வழியலாயின.

★

## 6. அந்தப் பிரார்த்தனை!

பட்டத்தரசி பரிமளவல்லியின் ஆணைப்படி பூங்குழலியை அவள் கிராமத்திலிருந்து பல்லக்கில் வைத்துச் சுமந்து ஓடிக் கொண்டிருந்தனர் ஏவலாளர்கள். இன்னும் நான்கு நாழிகைப் பொழுதில் அரண்மனையை அடைந்ததும் என்ன நடக்குமோ என்ற ஏக்கத்தில் பூங்குழலியின் முழு நிலா வதனம் வாடியிருந்தது. ஆனால் அந்த ... அந்த ஞாபகங்கள் எத்தனை இனியவை? வாடிய முகத்தில் கனவின் மலர்ச்சி பரவிற்று.

அந்த நீர்த்துறையில் பூங்குழலி குடத்தில் நீர் மொண்டு கொண்டு படிக்கட்டில் ஏறிவந்த பொழுது 'ஏ பெண்ணே! தண்ணீர் தருகிறாயா?" என்ற குரல்கேட்டு அவள் நிமிர்ந்து பார்க்க... அங்கே அழகும் ஆண்மையும் பொலியும் ஓர் ஆடவன் குதிரையோடு நிற்கும் காட்சி;...... அவள் வைத்த கண்ணை எடுக்கமுடியாமல் இடர்ப்பட்டுத் தடுமாறித்



தலைகுனிய, "உன்பெயர் என்ன?" என்று ஆர்வம் பொங்க அவன் வினவ, "பூங்குழலி" என்று நாணத்தை வென்று அவள் கூற, அவன் மெதுவாக "நான் வீரப்பநாய்க்கன் இந்த நாட்டின் மன்னன்! என்னுடன் வேட்டைக்கு வந்த வீரர்கள் அதோ அந்தக் காட்டில் நிற்கிறார்கள். என்ன செய்யலாம் எனக்குப் பட்டத்தரசி வேறு இருக்கிறாளே என்று பார்க்கிறேன்" என்று வேதனைப்பட, அவள் தன்னை மறந்த ஏக்கத்தோடு அவனை ஏறிட்டுப்பார்த்துத் தலைகுனிய, "பூங்குழலி ஒன்று செய்வோம். இந்தப்பிறவியில் நாங்கள் கொடுத்து வைக்கவில்லை. அடுத்தபிறவியில் என்றாலும் நாம் இணையப் பிரார்த்திப்போமா?" என்று அவன் வேண்ட, அவள் நீரில் வீங்கிய கண்களோடு ஆமென்று தலையசைக்க இருவரும் பிரிந்தனர். அந்த உடன்படிக்கைக்கு, அதன் உள்ளடக்கமான பிரார்த்தனைக்குத்தான் எத்தனை சக்தி. இருவரும் படித்துறை நிகழ்ச்சியை நினைந்து நினைந்து பிரார்த்திக்கப் பிரார்த்திக்க இப்பிறவியிலேயே ஒருவரை ஒருவர் பிரிந்திருக்கமுடியாத தவிப்பு ஏற்பட்டு வளர்ந்து...... ஈற்றில் ஒருநாள் பூங்குழலி அரண்மனைக்கே சென்று வீரப்பநாய்க்கனின் முன் கண்ணீர் சிந்தி நிற்க, அதன்பின் நள்ளிரவில் பூங்குழலியின் கிராமத்தில் வீரப்பநாய்க்கன் குதிரையின் குளம்பொலி அடிக்கடி எழுந்துமறைய ...... இதை மந்திரியார் மூலம் பட்டத்தரசி அறிந்து கொள்ள அதன் விளைவாகப் பூங்குழலி பல்லக்கில் அரண்மனையை நெருங்கிக் கொண்டிருந்தாள். தன்முன் நடுநடுங்கி நின்ற பூங்குழலியின் அழகில், தானே சொக்கிவிட்ட பொறுமையோடு பட்டத்தரசி பரிமளவல்லி பேசினாள். "அதோ இருக்கிறது நான் உனக்கு ஏற்பாடுசெய்த மாளிகை! உன்னைப் புறக்கணிக்கப்போய் எனக்குக் கணவனையும் நாட்டிற்கு மன்னனையும் இல்லாமலாக்க நான் விரும்பவில்லை".

★

## 7. பட்ட காலிலே......!

அன்று அவர்களுக்குச் சம்பளம். கங்காணி செல்லமுத்து லயத்து முன்னறையில் ஒருகாலை நீட்டி அமர்ந்திருக்கிறான். கடுக்கன் துளைதூர்ந்து விட்ட செவிகள், கறுத்தக் கோட்டு! அவனெதிரில் வற்றிக் கறுத்துலர்ந்த முகங்களோடு குஞ்சுங் குழந்தையுமான ஐந்து பிள்ளைகள் அரை நிர்வாண முழு நிர்வாணக் கோலங்களில் நிற்கின்றன. மனைவி கறுப்பாயியும் மூத்த மகள் இந்திராவும் உள் அறையில், புகை கமறும் ஈர அடுப்புடன் போராடிக் கொண்டிருக்கின்றனர். அந்த மாதம் கொட்டும் பனியிலும், சுள்ளென்றடிக்கும் வெய்யிலிலும் சோவென்று பொழியும் மழையிலும் சறுக்கல் மலைகளில் நின்று செல்லமுத்து கறுப்பாயி இந்திரா மூவரும் சம்பாதித்த பணத்தில் சில்லறைக்கடைக் கடன் 90 ரூபா போக மிகுதி 135 ரூபா அவன் முன்னால் கிடக்கிறது. கள் குடிக்க அவன் போன மாதம் வட்டிக் கடையில் 100 ரூபாவுக்கு ஈடுவைத்த கறுப்பாயி சங்கிலியை மீட்க 125 ரூபா போய்விடும். மிகுதி 10 ரூபா கைமாற்றுக் கடனுக்குச் சரி! நாளை பக்கத்துத் தோட்டத்தில் செல்லமுத்துவின் தங்கை மகளுக்குக் கல்யாணம். அங்கே போகப் பிள்ளைகளுக்குக் காதிலே கழுத்திலே ஒன்றும் இல்லை. மூன்றும் மாதம் ஈடுவைத்த இந்திராவின் சங்கிலியை இந்த மாதமும் மீட்கமுடியவில்லை. அதுமட்டுமா? குழந்தைகளுக்கு ஆனசட்டை சேலைகூட இல்லை.

"இந்திரா அக்கா! நீங்க நாளை கல்யாணத்துக்கு வரவில்லையா?" என்ற குரல் கேட்டுச் சிந்தனைச் சுழலில் நின்றும் விடுபட்டு நிமிர்ந்தான் செல்லமுத்து! காதுகளில் சிமிக்கிகள் குலுங்க, கைவளையல்கள் கலகலக்க, கழுத்துச் சங்கிலி தன் பிஞ்சு மார்பகங்களில் பளிச்சிட்டுப் புரள ஓடி வந்தாள் பக்கத்து வீட்டுச் சிறுமி! "துரைவீட்டுப்பிள்ளை போல் அல்லவா இருக்கிறாள்? எங்களிலும் குறைந்த சம்பாத்தியமுள்ள இந்தக் குடும்பம் இத்தனை சீரும் சிறப்புமாக வாழ்கிறபோது...நானும், நான் பழக்க அவளும் குடித்து மாதா



மாதம் 125 ரூபாக்களைப் பாழாக்கி...ஐயோ எத்தனை 125 ரூபாக்கள்! அவ்வளவையும் மிச்சம் பிடித்திருந்தால் எத்தனை ஆயிரம் ரூபாக்கள்!" என்று செல்லமுத்து எண்ணக்கரங்களால் நெஞ்சைப் பிழிந்து கொண்டிருந்தபோது வீட்டினுள்ளிருந்து 'இல்லைப் பரிமளம்! அப்பா அம்மா போய்வருவாங்க!' என்று தன் இல்லாமையை நெஞ்சுள் மடக்கிய மனக்குமைவோடு கூறுகிறாள் இந்திரா! அவனுக்கு வேதனை நெஞ்சை உலுககிப் பிசைய நெற்றி நரம்புகள் விம்மிப்புடைத்து வலிக்கின்றன. தலையுள் பூகம்பப் பேரொலியின் ஓலம்! தன்னை மறந்து எழுந்த செல்லமுத்து நிம்மதியைத் தேடிக் கள்ளுக் கடைப்பக்கமாகப் பழையபடி அதோ நடந்துகொண்டிருக்கிறான்.

★

## 8 சாதியே! நீ சாகாயோ?

என் ஒரே மகன் இறந்துவிட்டான் ஐயா!. தான் விரும்பின தாழ்ந்த சாதிப்பெண்ணைக் கட்டிக்கொள்ள விடவில்லையென்று அவன் மனமுடைந்து...... நஞ்சு குடித்து, ஐயோ அவன் இறந்தே விட்டானா? "காதலித்து விட்டேன்! இனி அவளைக் கட்டினாலும் சரி, வேறு பெண்ணை மணந்தாலும் சரி, செத்தாலும் சரி, அவளைக் காதலித்ததைச் சொல்லி உலகம் பழித்தே தீரும். ஆகவே அவளை நான் மணந்து கொள்ள அனுமதியுங்கள் அப்பா!" என்று கெஞ்சினான் ஐயா! நான் அதைக் கேட்டேனா? அந்தப் படித்த பிள்ளை சொன்னது எத்தனை உண்மை! அவன் இறந்தும் அவனை இகழ்வதன் மூலம் இந்தப் பாழும் உலகம் என்னைத் துன்புறுத்தத்தானே செய்கிறது? என் ஒரே பிள்ளையை துடித்துப்பதைத்துச் சாக வைத்த துயரத்தோடு நான் சமூகத்தின் இந்தக் கொடுமையை அனுபவிப்பதை விட அவனை ஆனந்தமாக வாழ வைத்து, அந்த நிம்மதியோடு இரக்கமற்ற கொடிய உலகின் புறக்கணிப்பை ஏற்றுக் கொண்டிருக்கலாமல்லவா? ஐயோ! இனி உணர்ந்து கொண்டு என்ன பலன்? ஆ! கொடிய உலகமே! நீ வகுத்த ஏற்றத்தாழ்வுகளை மீறினாலும் புறக்கணித்துத் துன்புறுத்தும் நீ, அவற்றிற்குக் கட்டுப்பட்டாலும் கைகொட்டிச் சிரித்து வேதனை

தருகிறாயே! எனக்கு மட்டுமா வேதனை? என்மகனை நம்பின அந்த ஏழைப் பெண்ணின் வாழ்வு? ஆமாம் கட்டுவது கந்தையானாலும் நெஞ்சு நிறைந்த மானம் உள்ள பெண் அவள். எனக்குத் தெரியும்! அதோ குடிசையின் முன்னால் ஆலமரத்தின் அடியில் அவள் அலங்கோலமாகக் கிடந்து புரண்டு புரண்டு அழுகிறாளே! அவளைப்பெற்ற தாயும் தகப்பனும் இடிந்து போய் அவளருகில் அமர்ந்திருக்கிறார்கள், வீட்டில் நான்கு நாட்களாக அடுப்பே புகையவில்லை. நான் என் மூன்றடுக்கு மாடி வீட்டையும் இரண்டு இலட்சத்துக்கு இருக்கும் நிலம்புலம் நகை நட்டுக்களையும் அவளுக்கே கொடுக்கப் போகிறேன். அப்படியே கொடுத்து "என் மருமகளே! என்று உரக்கக் கூவியழுது அவள் கையால் உணவு வாங்கி உண்டாலும், நான் அவளுக்கு மாமன் ஆகிவிட்டாலும் அவள் இழந்த வாழ்வு மீண்டுவிடுமா? ஐயோ! இனி என்னால் சரியான தீர்வுக்கு வரவே முடியாதா? ஆமாம் சரியான முடிவு ஏற்படுத்த வேண்டியவன்தான் சமூகத்தின் கோடூரமான கட்டுப்பாட்டால் சாகடிக்கப்பட்டு விட்டானே! ஏ! கொடிய சாதியே! நீ சாக மாட்டாயா? இனியென்றாலும் மனிதனை இங்கேவாழவிட்டு இதுவரை எடுத்த உயிர்ப்பலிகளால் திருப்தியடைந்து நீ செத்தொழிய மாட்டாயா?

★

# 9. சத்தியம் செய்த சதி

பார்வையிழந்து குருடாகிவிட்ட விழிகள்! பசி குடைந்தெடுக்கும் வயிறு! கந்தைக் கோலம் - பெஞ்சமின் கைத்தடியால் பாதையைத் தட்டித்தடவி நகர்ந்து கொண்டிருக்கிறான். பாழடைந்த மண்டபம் போலாகி விட்ட உடல் நடுங்கித் தடுமாற ஓர் ஓடையைக் கடந்து கைத்தடியில் தட்டுப்பட்ட மலைப் படிக்கட்டு ஒன்றில் களைத்துக் களைத்து ஏறிச் சென்றவன் ஒரு வீட்டு முற்றத்தையடைந்த போது அசதி தாங்காமல் விழுந்தே விடுகிறான். "இங்காவது ஒரு பிடி சோறு கிடைக்குமா? "என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டு அவன் சுருண்டு கிடக்கையில் ''ஐயோ பாவம்!'' என்றொரு பெண் குரல்! அக்குரலில் சிலிர்த்தெழுந்த அவன் சிந்தனையில் நீறு



பூத்துக்கிடந்த ஞாபகங்கள் மின்னுகின்றன. பெஞ்சமின் 8 வருடங்களுக்கு முன் எஞ்சினியரிங் கல்விக்காக இங்கிலாந்து பயணமான போது வானுலகத் தேவதை போன்ற சுகிர்தாவை – அவன் இதயத்தரசியைப் பிரிய முடியாமல் கண்கள் கலங்கியது; அவன் விருப்பப்படி அவள் ''உங்கள் கண்கள் மேலாணையாக உங்களை நான் மறந்து நடக்கமாட்டேன் ''என்று அவன் கையிலடித்துச் சத்தியஞ் செய்து, தன் கையால் அவன் கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்து விம்மியது; அவன் லண்டனில் மூன்று ஆண்டுகளாக மாதமொரு கடிதமனுப்பி, ஒரு கடிதம் பெற்று மகிழ்ந்தது, இறுதியாக சுகிர்தா ஒரு அதிர்ச்சி தரும் கடிதத்தை அவனுக்கெழுதி, உங்களை நம்பி நான் இங்கே காத்திருந்து கண்ணீர் வடிக்க, நீங்கள் உவ்விடம் யாரோ வெள்ளைக்காரப் பெண்ணோடு உறவு வைத்து உல்லாசமாக வாழ்கிறீர்கள், இங்கு எல்லோரும் பேசிக்கொள்வதைக் கேட்டு நான் கதறி அழுது தீர்த்து விட்டேன். இனி நீங்கள் யாரோ! நான் யாரோ!'' என்று அவனைக் குற்றஞ்சாட்டியது. பெஞ்சமின் பதறித்துடித்து, "அது வெறும் பொய்! கட்டுக்கதை!'' என்று ஆயிரம் சத்தியங்கள் செய்து கடிதம் எழுதியும், பதில் கிட்டாது போனது; ஒருநாள் ஆய்வு கூட்டத்தில் ஆய்வுக் குழாய் வெடித்து அவன் கண்களை இழந்து, படிப்பை முடிக்காமலே குருடனாகத் தாய் நாடு திரும்பியது; அவனைக் குருடனாக்கிச் சத்தியத்தை மீறிய சுகிர்தா மலைநாட்டுப் பக்கம் ஆசிரியப் பணியேற்றுச் சென்றதாக அவன் கேள்விப்பட்டது ஐந்து வருடம் தம்பியர் நிழலிலிருந்து இறுதியில் பித்துப் பிடித்து வீட்டை விட்டுக் கிளம்பி ஊரூராக அலைந்து இந்த ஊருக்கு வந்து சேர்ந்தது; எல்லாம் ஞாபகத்துக்கு வர பெஞ்சமின் தன்னை மறந்து ''சுகிர்தா! ஒரு பாவமும் அறியாத என்னைக் கெட்டவனாக எண்ணி என் கண்களையும் வாழ்வையும் சேர்த்துப் பறித்து விட்டாயே அம்மா!" என்று வேதனையோடு முனகிய பொழுது ''ஐயோ என் பெஞ்சமின் என்னை மன்னித்து விடுங்கள்" என்ற அலறலைத் தொடர்ந்து ஒரு மாராப்பு மேனியும் வாழைத்தண்டுக்கைகளும் அணைத்த அணைப்பில் அவன் சிக்கிக்கிடந்து பதறுகிறான். அவன் விழிகளை இழந்து விட்டாலும் விழி நீரை இழக்கவில்லை.

★

# 10. மினிப் பத்தினி

பஸ் நின்றது! பலர் இறங்கினர். பலர் ஏறினர். பள்ளிக்கூட நோட்டுப் புத்தகத்தைத் திறந்து வைத்துப் பரீட்சைக்காகப் படித்துக் கொண்டிருந்தான் சுந்தர். அவன் பக்கத்தில் இருந்த முதியவர் எழுந்து இறங்க ஒரு நவநாகரீக மங்கை மினிச்சட்டையோடு அவன்பக்கத்தில் வந்தமர்ந்தாள், கரையில் நன்றாக ஒதுங்கி உட்கார்ந்து கொண்ட சுந்தர் படிப்பில் மூழ்கி இருந்த போது தன்தோளில் மீண்டும் மீண்டும் அவள் தோள் வந்து முட்டுவதைப் புரிந்து கொண்டு நிமிர்ந்து பார்த்தான்.......... அவள் முகத்தில் விகாரமான உணர்ச்சிகள்! கண்களில் ஒரு வெறி கலந்த கள்ளப்பார்வை. அவன் கூசிக்குனியவே அவள் மீண்டும் இடிக்கத் தொடங்கி அவன் அருகில் மிக அருகில் நெருங்கி உட்கார்ந்து கொண்டு தன் கால்களால் அவன் கால்களை ஏதேதோ செய்யத் தொடங்கி விட்டாள். அருவருப்படைந்த சுந்தர் ஆத்திரத்தோடு தன் புத்தகங்களை எடுத்து அவளுக்கும் தனக்கு மிடையில் திணித்து விட்டான். பஸ் அடுத்து வந்த நகரத்தில் நின்றபோது முன்சீற்றில் இருந்த ஒருவர் இறங்கினார். ஏமாற்றமும் ஆத்திரமுமாக இருந்த அந்த மோகினி எழுந்து அந்தச் சீற்றில் அமர்ந்து கொண்டு. அங்கும் பக்கத்தில் இருந்த இளைஞனை இன்பபுரிக்கு அழைக்கத் தொடங்கி, பெரும் வெற்றி பெற்று, தன்மார்பும் அவன் தோளும் கதைபேச தானும் மகிழ்ந்து அவனையும் மகிழ்வித்தபடி குதூகலப் பிரயாணம் செய்து கொண்டிருந்தாள். அடைந்து திரும்ப வேண்டிய பஸ் நிலையத்தை பஸ் சென்றடைந்தது. பிரயாணிகள் இறங்கிக் கொண்டிருந்தனர். பஸ்ஸில் இருந்த ஒரு முரட்டு வாலிபன் பிரயாணிகளை இடித்துத் தள்ளிக் கொண்டு ஆத்திரத்தோடு சுந்தரை நெருங்கினான். படிப்புச் சிந்தனையில் தன்னை மறந்து நின்ற சுந்தரின் கன்னத்தில் அவன் கரம் கொடுத்த அறை அவனை நிலை குலைந்து சுருண்டு விழச் செய்து விட்டது. மறுகணம் பஸ்ஸில் "என்ன என்ன?" என்ற குரல்கள் "இந்தச் சீற்றில் இவனுடன் இருந்த என் தங்கை இடையில் எழுந்து வேறு சீட்டுக்குப்



போனாள் என்றால் அதன் அர்த்தம் என்ன'' – அவன் குமுறினான்.

அப்பொழுதுதான் தள்ளாடி எழுந்த சுந்தர் மீண்டும் பிரயாணிகள் கைகளுக்கும் கால்களுக்கும் பந்தாகித்துடி துடித்ததை அந்த மினிப் பத்தினி பார்த்துக் கொண்டு நின்றாள் ஒரு பாவமும் அறியாதவள் போல.

★

# 11 சிரிப்பாயிருக்கடி!

அது பொல்காவலைப் புகைவண்டி நிலையம். ''இன்னும் ஐந்து நிமிடங்களில் நானுஓயா கடுகதி வந்துவிடும்'' என்று நண்பன் கூறிக்கொண்டிருக்கையில் மேடையில் பிரயாணிகள் வந்து திரண்டுகொண்டிருந்தனர். யாழ்ப்பாண மெயிலில் வந்திறங்கிய ஒரு முதியவரும் தமது மூட்டை முடிச்சுகளோடு வந்து என் அருகில் நின்றார். மகளிர் 'வெயிட்டிங் ரூமி'லிருந்து வெளியே வந்துகொண்டிருந்தனர் மங்கையர் சிலர். அவர்களின் சுயவிளம்பரப்படியும் உலகத்தையே கரைத்துக் குடித்துவிட்ட அசட்டு நினைவிலெழும் கொக்கரிப்புப் பேச்சின் படியும் அவர்கள் கண்டிப் பல்கலைக்கழக மாணவிகள். அந்த அடக்கமறியா மாணவகூட்டத்தில் ஒருத்தி என்னருகில் நின்ற முதியவரின் பெட்டி ஒன்றைச் சுட்டிக்காட்டி, ''ஏ கலா! இதைப் பார்க்கச் சிரிப்பாயிருக்கடி!" என்று சொல்லிப் பெரிதாகச் சிரித்தாள். அந்தப் பெட்டி புகைவண்டிக்குள் மிதியுண்டு, நசிந்து, கிழிந்து, சிதைந்து காணப்பட்டது. முதியவர் முகம் கறுத்து, வெட்கி வேதனைப்படுவது என் மனத்தை என்னவோ செய்தது. அந்த மண்டை வீக்கத்துக்கு உடனடியாக மருந்து கொடுக்காவிட்டால் என் மனக்கொதிப்பு அடங்காது என்பது நிச்சயமாக எனக்குத் தெரிந்தது. அந்த அதிகம் படித்த மேதையைப் பார்த்தேன். தலை 'பொப், குரோப்' செய்யப்பட்டுக் குழம்பியிருந்தது. அருகில் நின்ற நண்பனைத் தட்டி, சற்றுப் பலமான குரலில் ''அப்படியே ஒரு பைத்தியத்தின் தலைபோல இருக்கிறது! இல்லையா?'' என்று குத்தலாகக் கூறி, அவள் கண்ணிற் படும்படியாக அவள் தலையை உற்றுப் பார்த்துவிட்டுக் கிழவரின் பெட்டி

யையும் பார்த்தேன். அவள் முகத்தில் அசடுவழிய நிலை கொள்ளாமல் தவித்துநின்றாள். அப்பொழுதுதான் விழித்துக் கொண்டு "என்ன? என்ன?" என்று தடுமாறிய நண்பனை "இந்தப் பெட்டிதான்!" என்று சமாளித்துவிட்டு நிமிர்ந்து பார்த்தேன். அவள் பிளாட்பாரத்தில் நின்றவர்களை இடித்து விலக்கிக்கொண்டு தன்னந்தனியாக வெகுதூரத்தில் போய்க் கொண்டிருந்தாள்.

★

## 12. எழுத்தின் வலிமை

இரவு 8 மணியிருக்கும்! வெளியில் கொட்டும் மழையின் பேரிரைச்சல்! நான் பத்து நாட்களுக்குமுன் எழுதிய சிறு கதையை முற்றும் தெளிந்த மனநிலையோடு சரிபார்த்துக் கொண்டிருந்தபோது, மரங்கள் பேயாட்டமிடப் புயல் சீறும் பயங்கர உறுமலையும் மழையின் சோவென்ற பேரிரைச்சலையும் கிழித்துக்கொண்டு என் இதயத்தில் பாய்ந்தது, "ஐயோ மகளே! என்னை விட்டுப் போய்விட்டாயா?" என்ற கூக்குரல்! பதறி எழுந்தேன். கதவைத் திறந்துகொண்டு மழையில் நனைந்தபடி வீட்டின் பின்புறமாக அலறல் வந்த திசையில் விழுந்தடித்து ஓடினேன். அந்த மலையின் சாரலில் படிக் கட்டுகளாக அமைந்த பசிய வயல் நடுவே கிடந்த வைக்கோல் வேய்ந்த சிறு குச்சுக்குடிசையிலிருந்து மாரியாத்தா கதறுவது தெளிவாகக் கேட்டது. அவளுக்கு ஒரே ஒரு மகள்தான். பள்ளிமாணவி! பருவக்குமரி! சிலநாட்களுக்கு முன்னர்தான் மாரியாத்தாவீட்டு வேலைக்காரி கன்னிப்பெண் அவள் நச்சரிப்புத் தாங்காமல் கிருமிநாசினியைக் குடித்து மரணதேவனின் மீளாப் பாழ்மண்டபத்தில் நுழைந்தாள். மறுநாள் அவள் பிணத்தைச் சுமந்து அழுது புலம்பிக் கொண்டு அவள் தாயும் கிழமான தந்தையும் என்வீட்டு முற்றத்தால் படிஇறங்கிப் போயிருந்தனர். இதற்குள்ளாக மாரியாத்தா மகளும்......? என்னாலான உதவியைச் செய்ய வேண்டும் என்ற பரபரப்போடு அந்தத் தனிமை சூழ்ந்த குடிசையை நெருங்கி வாசற்படியைத் தாண்டிக் குடிசைக்குள் நின்றபோது, என்னை நிமிர்ந்து பார்த்துவிட்டு "யார்



நீங்களா? எதற்கு வந்தீங்க? அந்தக் காட்டேரி வேலைக்காரக் குட்டி தற்கொலை செய்துகொண்டதற்கு நானே காரணம் என்றும், அந்தப் பாவத்துக்காக அவளைப் பெற்றவங்க அனுபவித்த துயரத்தை நானும் என் பிள்ளையைப் பறி கொடுத்து அனுபவிக்க நேர்ந்ததாகவும் கதையெழுதிப் பத்திரிகையில் போட்டுச் சல்லி வாங்கின ஆளல்லவா நீங்கள்? இங்கேன் வந்தீங்க? பார்த்துச் சிரிக்கவா?" தன் ஆத்திரக் குப்பையை என்மேல் கொட்டிக் கலங்கியழுதாள் மாரியாத்தா! அவள் மகளைப் பார்த்தேன், கயிற்றுக் கட்டிலில் பரிதாபகமாக இறந்துகிடந்தாள். துயரமும் குற்ற உணர்வும் என் நெஞ்சை மலைப்பாறைகளாக அழுத்தி உலுக்க, விறைத்து நின்றேன். என் எழுத்தின் வலிமை இப்படி யான பயங்கரத்திலா வெளிப்பட்டிருக்கவேண்டும்?

★

## 13. விறகைப் பொன்னாக்கி!

குஷ்டரோக ஆஸ்பத்திரியின் ஆண்கள் வார்ட்டில் நான் ஒவ்வொரு நோயாளியாக காய்ச்சல் பார்த்துக்கொண்டு கடைசியாக அவனிடம் வந்தபொழுது...... அவன் என்னைப் பார்த்துப் பார்த்துப் பயந்து திருதிருவென விழித்தான். துர் நடத்தையின் பலனாக இந்தக் கொடுநோயைக் கட்டிக் கொண்டவர்கள் வெட்கத்தால் அவமானப்பட்டுப் புழுங்குவது இயல்பே! என்றாலும் இத்தனை தூரம் பதறிய ஒரு நோயாளியை இதுவரை நான் பார்த்ததே இல்லை. அவன் திடீரென்று என்னை "அம்மா!" என்றழைத்து மெல்லக் கேட்டான். "உங்களுக்குத் திருமணமாகவில்லையா?" 'இவன் யார் இதைக் கேட்க' என்று நான் எண்ணிக்கொண்டாலும் கருகிய முகத்தோடு, "இல்லை" என்பதுபோலத் தலை யசைத்தேன். "ஏன்? எதற்காக?" –அவன் குரலில் ஒலித்த ஆத்திரம் என்னை அதிரவைத்து, ஆத்திரத்தைக் கிளப்ப "ஏன் உன்னைப்போல் அழுகிச் சாகவா?" சினத்தில் கத்தி விட்டு உடம்பெல்லாம் பதற நின்றேன். அவன் படுக்கையில் எழுந்தமர்ந்து நெஞ்சைப் பற்றிக்கொண்டு விம்மிக்குலுங்க,

கண்ணீர் பொலுபொலென்று உதிர்ந்தது. பார்க்கப் பரிதாப மாக இருந்தது எனக்கு. "என்னை மன்னித்துவிடு! பருவ முறுக்கில் பாழாகி அழிய இருந்த என்னை அன்போடு இடித் துரைத்து, என் நெஞ்சுள் தெய்வமாகப் புகுந்துகொண்டு தன் நினைவால் என்னைப் பைத்தியமாக்கிவிட்ட பரஞ்சோதி என்னும் ஒருவர் என்பண்பைச் சந்தேகித்து எங்கோ சென்றுவிட்டதால் என்னுள்ளம் தீயில் விழுந்த புழுவாகி வெறும் உடம்பு வாழ்வை வெறுத்ததால் நான் திருமணஞ் செய்துகொள்ளவில்லை. என்மனச்சாந்திக்காகவேஇந்த நர்ஸ் வேலைக்கு வந்தேன். ஆத்திரத்தில் தவறுதலாக உன்னைப் புண்படுத்திவிட்டேன், என் வேலைக்கு இருக்கவேண்டிய பொறுமையை எப்படி இழந்தேனோ......!"

அவன் பேசினான்: "நான் ஒரு பேதைப் பெண்ணின் பண்பை, அன்பை நம்பாமல் அவளைவிட்டுப் பிரிந்து அவளை மறக்க எங்கெங்கோ அலைந்தும் எதை எதையோ செய்தும் நோய்களைக் கட்டிக்கொண்டதுதான் மிச்சம். இறுதியிலும் அவளை மறந்தபாடும் இல்லை. துன்பம் தொலைந்தபாடுமில்லை." கண்ணீரில் அவன் குப்பைத்தாடி நனையலாயிற்று. "அம்மா! தாகமாக இருக்கிறது, கொஞ்சம் தண்ணீர்..." என்று அவன் தயங்கியபோது நான் ஏனோ கதறியழும் நெஞ்சோடு தண்ணீர் எடுத்துவர ஓடிக்கொண்டிருந்தேன். மீண்டும் வந்த பார்த்தபோது அவன் படுக்கைவெறுமையாகக் கிடந் தது. அதிர்ந்து பதறிநின்ற என் கண்களில் அவன் படுக்கை யில் தொங்கிய 'டிக்கட்டில்' கிடந்த பரஞ்சோதி என்ற பெயர் பட்டபோது "ஐயோ" என்று தலையில் கைவைத்துக் குழறவேண்டும்போல இருந்தது. ஆம் அது என் பரஞ்சோதி தான். விறகைப் பொன்னாக்கித் தன்னைக் கரியாக்கிக்கொண்ட பசும்பொன்! ஐயோ என் பரஞ்சோதி!

★



# 14. மதமாற்றம்

தூரத்தில் எங்கோ கிணற்றுவெடி வெடித்துப் பாறுங்கல் லொன்று சிதறிப் பறந்து பொலீரென்று உதிரும் ஓசை! நாளை பிற்பகல் என் கடிதத்தைப் படிக்கப்போகும் டல்சியின் இதயமும் இப்படித்தானே சிதறிச் சின்னாபின்னமாகி........ என் நினைவே தன் நினைவாக என்பிரிவில் துன்புற்றுத் தினம் கடிதம் எழுதும் அவள் நிரந்தரமாக என்னைப் பிரியநேர்வதை அறியும்போது......? பச்சை மலைகளின் நடுவே பாலாடை போன்று தூரப் பார்வைக்குத் தெரியும் அந்த நகரத்து அஞ்சலகத்துக்கு நான் மாற்றலாகி டல்சியின் வீட்டில் ஓர் அறையில் வாழ்வும் அவள் வீட்டில் உணவுமாக ஒப்பந்த மாகி, ஓய்வு நேரங்களில் அவளுக்குக் கணக்குச் சொல்லிக் கொடுக்க ஏற்பாடாகி, அவள் என்னெதிரில் அமர்வதற்கும் வாய்திறந்து பேசுவதற்கும் நாணித் தடுமாறிக் கன்னஞ் சிவந்து, விளங்கிய கணக்கையும் விளங்காததுபோல் நடித்து, என்னை மீண்டும் மீண்டும் பேசவைத்துக் கேட்பதில் ஏதோ இன்பத்தைக் கண்டு முகங்கனிந்து, களவாகப் பார்த்துக் குறுநகைபூத்து.... அப்பப்பா எத்தனை பசுமையான நினைவுகள்!

நாட்கள் செல்லச் செல்ல அவள் தானே தயாரித்துத் தன் கையால் எனக்கு ஊட்டி மகிழ்ந்த உணவு வகைகள் எத்தனை! தளிர் விரல்களில் தன் இதயத்தையே மலர்களாக ஏந்தி வந்து தந்த நாட்கள் எத்தனை! தன்கைக்குட்டையால் என் சேட்டிலும் லோங்சிலும் படிந்து கிடந்த தூசியைத் துடைத்து விட்ட நாட்களையும், என்னைவேலைக் கேக விட் டுப் பின்னே நின்று பார்த்து அவள் இதயம் பூரித்த பனி புலராக் காலை நேரங்களையும், "என்னை நீங்கள் மறக்க மாட்டீர்களே?" என்று அடிக்கடி அவள் கண்கலங்கிக் கேட்ட சந்தர்ப்பங்களையும் நினைக்கும் பொழுது? ஐயோ என்நெஞ் சம் வெடிக்காதோ?

"டல்சீ! உன்சந்தேகம் சரியாகி விட்டதம்மா! இன்று தொழிலிற்காகவும் வேறு அற்ப சலுகைகளுக்காகவும் கலப்பு மணம் என்றபெயரில் மதம் மாறும் மானங் கெட்டவர் மத்தி

யில் நான் உன் சமயத்திற்கோ நீ என் மதத்துக்கோ மாறுவது மானக் கேடம்மா! நீ மானம் மிக்கவள். நானும் அப்படி வாழ்வதையே நீ விரும்புவாய்! ஆகவே அநியாய மானவற்றிற்கு மதம் மாறுவோரின் கொடுமையால் நியாயமானவற்றிற்கும் மதம் மாறாமல் நீயும் நானும், அழுது அழுது வாழ்விழந்து சாக வேண்டியதுதான் டல்சீ!

★

## 15. இனி அவரைத் தேவையில்லை

அந்தக் காட்டு வெளி இரவில் பேய் பிசாசு நடமாடும் இடமென்றும், அங்கங்கே உள்ள பனங்கூடல்களிலும் மரத்தோப்புக்களிலும் நடுச்சாமத்திலே கொள்ளிவாய்ப் பிசாசு உலாவும் வெளிச்சத்தைக் கண்டவர்கள் உண்டென்றும் பக்கத்துக் கிராமங்களில் பேசிக்கொள்வர். யாழ்ப்பாணக் குடாநாட்டுள்ளே மக்கள் குடியேறாமல் அரசாங்கத்துக்குச் சொந்தமாகக் கிடக்கும் பிரதேசங்களில் அதுவும் ஒன்று. இந்த நிலையில்தான் மாந்திரீகம் தெரிந்த சந்நியாசி பீதாம்பரம், அந்தப் பெருவெளியின் நடுவிலே படர்ந்து நிற்பதும், முனியாடி ஆலமரம் என்று பெயர் பெற்றதும், இரவென்ன பகலென்ன ஆட்டுக்குக் குழை வெட்டுவோரும் அணுக அஞ்சுவதுமான அந்த ஆலமரத்தின் அடியில் விழுதுகளிலிருந்து அணில்கள் சத்தமிட, கிளைகளில் குருவிகள் சிறகடித்து ஆர்ப்பரிக்கத் துணிந்து குடியேறினார். அவர் அருளில் மயங்கி விட்டவர்கள் போலப் பலர் அவரிடம் வந்து பணிந்து திரிந்து அவர் ஊட்டிய துணிச்சலில் அவர் தங்கும் அந்த ஆலமரத்தைச் சூழ்ந்த பிரதேசத்தில் மனைவி மக்களோடுவந்து குடியேறினர். சந்நியாசியாருக்கு ஆலடியில் குடிசை கட்டிக்கொடுத்து, உணவளித்து, பக்தி சிரத்தையோடு வழிபட்டும் வந்தார்கள். பார்த்துப் பார்த்துப் பல ஊர்களிலுமிருந்து வந்து குடியேறிய மக்கள் பத்தே பத்து ஆண்டில் காடுமேடகற்றிப் பசுங்கழனிகளைப் படைத்து, கற்கோட்டைகள் போன்ற வீடுவாசல்களும் கட்டிக் கொண்டார்கள். சந்நியாசியாரின் குடியிருப்பான ஆலம் நிழலைச்



சந்தியாகக் கொண்டு நாலா திசையிலும் வீதிகளும் வீடுகளும் அமைந்து விட்டன. அந்தக்குடியிருப்பில் பெரிய புள்ளியாகிவிட்ட தென்னந் தோட்டச் சுந்தரமூர்த்தியின் பெயரைத் தழுவிச் சுந்தரபுரம் என்று பெயர் சூட்டப்பட்டு விட்ட அந்தப் புதுக்கிராமத்தில ஐக்கியபண்டகசாலை, தபாற்கந்தோர், மருத்துவ நிலையம், பள்ளிக்கூடம், சந்தை, கடைகண்ணிகள், என்பவற்றோடு கிராமசபையும் உருவாகிவிட்டது. நாளடைவில் தேடி வந்து வணங்குவோர், திருநீறு வாங்குவோர், உணவு படைப்போர் குறைந்து, கண்ட இடத்திலென்றாலும் கையெடுப்போர் குறைந்து விட்ட சந்நியாசியார், ஆலடிக் குடிசையில் அநாதையாகக் காலந்தள்ளி வந்தார். ஒருநாள் கிராமசபையிடமிருந்து அவருக்கு ஒரு கட்டளை பதிவுத் தபாலில் வந்தது.

'ஐயா! தாங்கள் தங்கியிருக்கும் ஆலமரத்தை வெட்டி வீழ்த்தி அகற்றிச் சந்திக்கும் தெருக்களுக்கும் தாரூற்றுவதற்குச் சபைதீர்மானித்திருப்பதால் தங்கள் குடிசையை ஒரு மாத காலத்துள் அப்புறப்படுத்தி விடும்படி இத்தால் அறிவிக்கிறோம்,'' என்று அக்கடிதத்தில் இருந்தது.

★

## 16. பங்காளிகள்

சிவம் பலசரக்குக் கடையின் பங்காளர் சபைப் பொதுக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. அவ்வாண்டு இலாபத்தில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டதற்குரிய காரணங்களை அலசி ஆராய்ந்து கொண்டிருந்தனர் பங்காளிகள்!

கடைக் கணக்காளரைக் கைக்குள் போட்டுத் தினம் ஐந்து பத்தாக அடித்துச் செல்லும் மனேஜர் எழுந்து ''பங்காளர்கள் தம் தம் கடமைகளை நேர்மையாகவும் விசுவாசததோடும் செய்ய வேண்டும்'' என்று அறிவுரைத்து அமர்ந்தார். கட்டுப்பாட்டு விலைப்பொருட்களைக் கள்ளச் சந்தையில் ஒரு விலைக்கு வாங்கி அதிலும் கூடியவிலையைக் கணககுக் காட்டும் கொள்வனவுப் பொறுப்பாளர் எழுந்து

"நம்பிக்கை நாணயம், விசுவாசம், நேர்மை, என்ற நல்வி லட்சியங்களை நாம் கடைப்பிடித்து ஒழுகினால் நிச்சயம் லாபம் அதிகரிக்கும்!" என்று முழங்கி விட்டு உட்கார்ந்தார். சொந்த வேலையாக வெளியூர் சென்று விட்டு வியாபார அலுவலாகச் சென்றதாக நிலைநாட்டிப் பிரயாணச் செலவும் சம்பளமும் கறந்து கொள்ளும் பங்காளர் எழுந்தார். "பங் காளிகள் கடையின் நலங்கருதித் தியாகங்கள் பல புரிய வேண்டும்" என்று பண்புரைத்து அமர்ந்தார். கடைத் திறப்புக்களை வைத்திருக்கும் பொறுப்பை ஏற்று நள்ளிரவில் கடைதிறந்து பால் மா பிஸ்கட் டின்கள் களவாடிச் செல்ப வர் எழுந்தார். "பிறர் சொத்தில் சுண்ணாம்புக் கட்டியும் நமக்குச் சேரக் கூடாதென்ற எண்ணம் நமக்கு வேண்டும்" என்று உரைத்துப் பத்தினி போல் உட்கார்ந்தார்.

ஐந்தாவது பங்காளர் கடை நிர்வாகத்தில் பங்கு பற்று மல் நிர்வாகப் பொறுப்பிலுள்ள அத்தனை பேரின் திருவிளை யாடல்களையும் ஆதார பூர்வமாக அறிந்திருப்பவர் கடைசி யாக நிதானமாக எழுந்து நின்று பேசினார்: "நம் கடை யின் பங்காளர்களும் நிருவாகிகளுமான நண்பர்கள் இனி மேலென்றாலும் தங்களுக்கிருக்க வேண்டிய நல்ல பண்புகளை எடுத்துச் சொன்னார்கள் சொன்னார்களே ஒழிய இனியே னும் திருந்தி நடப்பார்களோ என்பது சந்தேகமே! எனவே நான் இந்த ஆண்டோடு பங்கு வியாபாரத்தில் இருந்து விலகிக் கொள்கிறேன்" நான்கு பங்காளர்களும் திடுக் கிட்டுத் திருதிரு வென்று விழிக்க அவர் அமர்ந்தார்.

★

## 17. ஏழை நெஞ்சே...!

வண்டி தள்ளி ஐந்து வயிறுகளுக்கு அன்றாடக் கஞ்சி யூற்றும் தொழிலாளி கணபதி. நாள்முழுவதும் விடாது பெய்தமழை அன்றைய அவன் பிழைப்புக்கு மண்போட்டு விட்டது. பட்டணத்தில் அறிந்த கடைகள் பலவற்றில் அரிசியும் பருப்பும் கடன்கேட்டு ஏமாந்த மனமும், வெறுங் கையுமாக வீடுசென்றபோது அவன் பிள்ளைகளின் அழுகுரல்



பாதிவழியிலிருந்தே காதிற்பட்டு அவன் இதயத்தைப் பிசைந்து பிழியலாயிற்று. கவலையோடு குடிசைக்குள் நுழைந்து, தன் நேர்மையில் நம்பிக்கை வைத்து, தனக்கு யாரும் உதவி செய்ய முன்வராத, இணங்காத அவமான மும், பிள்ளைகளின் பசிமுகங்கண்ட பதைப்பும், தாங்காமல் பிள்ளைகளைக் கட்டிக்கொண்டு கணபதியும் விக்கி விக்கிஅழ... மனைவி மீனாட்சி கணவனைத் தேற்ற முயன்று தானும் அழுதாள். இரவு 10 மணிவரை அழுது அழுது களைத்து ஈற்றில் பெற்றவர்களின் மடிகளிற் சோர்ந்து உறங்கிக் கிடந் தன குழந்தைகள். கணபதியின் மூளை என்றுமில்லாத ஆழ மாக, எப்பொழுதுமில்லாத வேகத்தோடு முற்றும் புதிய திசையிலே சிந்திக்கலாயிற்று. நேர்மைக்காக மாடாக உழைத்து மானமாக வாழ்ந்து வரும் அவனுக்கு உதவ ஒருவருமில்லை. அவனது மாசு மறுவற்ற நேர்மைக்கு மதிப்பில்லை, வாழ்வில்லை. மதிக்கப்படாத, வாழ்வளிக்காத நேர்மையை என்னதேவைக்கு? மடியில் உறங்கிக்கிடந்த பிள்ளைகளை எடுத்துக் கந்தற்பாயில் வளர்த்தி விட்டுத் தீர்மானத்தோடு எழுந்த கணபதி, மீனாட்சியை சோற்றுக்கு உலைவைக்கச் சொல்லிவிட்டு இருளில் இறங்கி நடந்தான். பட்டணத்தின் இருள் கவிந்த ஒரு முடுக்கில் இருந்த பலசரக்குக்கடை ஒன்றின் கூரை ஓடுகளைப் பிரித்துக் கொண்டு உள்ளே புதைந்த கணபதி கையில் ஒரு பை நிறைந்த அரிசி, பருப்புச்சரையோடு கூரையில் முளைத்துக் குதித்து மறைந்து மறைந்து குடிசையை அடைந்தான். கண பதியும் அவன் மனைவியும் அவசர அவசரமாகச் சோறாக்கிக் கொண்டிருக்கையில் தான் களவாடிய கடையின் கூரையைத் தான் மூடாமல்விட்டு வந்தது அவன் நினைவில் வந்துவிடவே யாராவது கொள்ளைக்காரன் ஒரு நாள் உணவளித்த அந்தப் புண்ணியவான் கடையைக் கொள்ளையடித்து விடக்கூடாதே என்ற பதட்டத்தில் புறப்பட்டு ஓட்டமும் நடையுமாகப் பட்டணத்தை அடைந்தான். அந்தக் கடையின் கூரையில் ஏறி ஓடுகளை உரியபடி அடுக்கி அதைச் சரிப்படுத்திவிட்டு அவன் இறங்கியபோது இரண்டு கரங்கள் திடீரென்று அவன் தோள்களைப் பின்னிருந்து பற்றின. அதிர்ந்து திரும்பினான். இரண்டு பொலீஸ்காரர் பெருமிதச் சிரிப்போடு நின்றிருந் தனர்.

★

## 18 இதயத்தால் வாழ்ந்தவர்கள்.

"அடியே பத்மா! இன்று பேயாவுக்கு முதல் நாள்! அவர் வந்திருப்பார்" லீலா சிந்தனையோடு கூறிவிட்டு நாற்காலிக்குள் அமர்ந்திருக்கும் பத்மாவை உற்றுப்பார்க்கிறாள்.

"யாரைச் சொல்கிறாய் லீலா!" பத்மா குழப்பத்தோடு கேட்கிறாள்.

"அவரைத்தான் சொல்கிறேன்! என்னுடைய அவரை பத்மா! எங்கள் உள்ளங்கலந்த காதலைத் தெரிந்து கொண்டும் அவர் பெற்றாரைப் பணத்தைக்காட்டி மருட்டி, அந்தக் கல்நெஞ்சக்காரி அவரை அபகரித்துக் கொண்டாலும் அவர் இதயம் என்னை மறக்கவில்லையடி!" பேசிக்கொண்டு போனவள் திடீரென்று பேச்சை நிறுத்தி நாணிக்குனிந்து கன்னங்களில் செம்மையும் கண்களில் படபடப்புமாக புன்முறுவலோடு நிற்கிறாள். மேனியிலும் இலேசான இன்ப நடுக்கம்! திடீரென்று அவளில் ஏற்பட்ட மாற்றத்தை அவதானித்துப் பத்மா வியந்து கொண்டிருக்கையில் "பத்மா அவர் என்னை இப்பொழுது அன்போடு அணைத்து என் கன்னங்களில்..." என்று நிறுத்திக் கன்னத்தை வருடிக் கொண்டபோது லீலாவின் கண்களில் ஆனந்தக்கண்ணீர் துளும்புகிறது. "எனக்கொரு குறைச்சலுமில்லைப் பத்மா! அவர் எங்கிருந்தாலும் அவர் இதயத்தில் நிகழ்வதை எனக்காக அவர் உள்ளம் உருகுவதை அப்படியே புரிந்துகொள்ளும் வலிமையை என் அன்பின் சக்தி எனக்கு வரமளித்திருக்கிறது." என்ற லீலா அதிர்ந்து விழித்து "ஐயோ! அவரை அந்த நெஞ்சழுத்தக்காரி ஏனோ ஏசித்தொந்தரவு தந்து.........பாரடி! அவர் அழுகிறாரடி!" என்று தேம்பி அழுது நின்று பதறுகிறாள். பாவம் லீலா! எப்படி மெலிந்துவிட்டாள். பைத்தியம் வேறு பிடித்துவிட்டது போலிருக்கிறதே. என்று பத்மா பரிதாபமாகப் பார்த்திருக்கையில் லீலா துள்ளி விழுந்து நிலத்தில் புரண்டு "அடியே! அவர் நஞ்சு குடித்து விட்டாரடி!" என்று அலறித்துடித்தெழுந்து கொட்டும் மழையுள் அலங்கோலமாக ஓடுகிறாள்! அவளைத் துரத்திக்கொண்டு



பத்மா ஓடுகிறாள். எத்தனையோ வளைவுகளில் திரும்பி ஓடி ஒரு வீட்டினுள் லீலா நுழைந்தபோது அங்கே......என்ன அதிசயம் .........பலர் கதறும் அழுகை, ஒப்பாரி! பத்மா பதறிக்கொண்டு உள்ளே சென்ற பொழுது கட்டிலில் கிடந்த ஒரு ஆணின் பிணத்தைச் சூழ்ந்திருந்து பல பெண்கள் அழுது கொண்டிருக்கின்றனர் ஒரு பெண் லீலாவின் வெறும் பிணத்தைக் கூந்தலில் பற்றி இழுப்பதும், காலால் மிதிப்பதும், உருட்டுவதுமாகப் பத்திரகாளியாக நிற்கிறாள்.

★

## 19. வேண்டாம் சார்.

எங்கள் பாடசாலைக்கு அன்றுதான் புதிதாக வந்திருக்கிறாள் அந்த ஆசிரியை. ஆச்சரியத்தோடு அவளை நெருங்கினேன் நான். "பிள்ளை! நீங்கள் சசிகலாதானே?" என்ற என் சந்தேகத்தைச் சரியாக்கத் தலையசைத்தவள் என்னை உற்று உற்றுப் பார்த்துவிட்டு "சார்! நீங்களா சார்" என்று ஆனந்தப்பெருக்கில் பதறினாள். கையில் தங்க வளையல்கள், கழுத்தில் தேர் வடம் போன்ற சங்கிலி, பளபளப்பான காஷ்மீர்ச் சேலை. அவள் செல்வச் செழிப்பைக் கண்களால் அளந்து வியந்த எனக்கு நான் 15 வருடங்களுக்கு முன் கண்ட தீர்க்க தரிசனம் சரியாகிவிட்டதை நினைக்க ஆனந்தமாக இருந்தது.

15வருடங்களுக்கு முன்பு ஒரு நாள். 2ம் வகுப்புப்பாட்டுப் பாடநேரம்! வண்ணாத்திப் பூச்சிகள் போன்ற குழந்தைகள் நடுவே உட்கார்ந்து பாடல் சொல்லிக்கொடுத்துக்கொண்டிருக்கிறேன். "பட்டுப் பட்டுச் சட்டை! பலரும் பார்க்கும் சட்டை! வெட்டித் துணியைத்தைத்த விலையுயர்ந்த சட்டை!" எல்லாப் பிள்ளைகளும் உற்சாகத்தோடு துள்ளியாடி ஆனந்தமாகப் பாடுகின்றன. ஆனால் அந்தச் சிறுமிமட்டும் வழமையான ஆர்வமின்றி வாட்டம்பரவிய முகத்தோடு உயிர்ப்பு மெலிந்த குரலில் பாட முடியாமல் பாடுகிறாள். அவளைப் பிடித்து வைத்துக் கொண்டு மற்றப்பிள்ளைகளை இருக்கைகளுக்கு அனுப்புகிறேன். அவள் வீட்டில் அப்பா, அம்மா

சண்டை, அல்லது வீட்டில் அவளை எதுக்காகவோ கண்டித்தோ தண்டித்தோ விட்டார்கள். அல்லது பசி......தூக்கம்! அவளை அன்போடு மெல்ல அணைத்து "சசி! காலையில் என்னம்மா சாப்பிட்டாய்?" என்று மெல்ல வினவுகிறேன். அவள் பதில் பேசாமற் சிரிக்கிறாள். நான் துருவித்துருவிக் கேட்டதன்பின் "ஒன்றும் சாப்பிடவில்லை சார்!" என்று முகங் கறுத்துத் தயங்குகிறாள். எனக்கு நெஞ்சில் இடிவிழுந்தது போன்றதோர் அதிர்ச்சி பதைப்பு! என் கண்கள் என்னையும் மீறிக் கலங்குகின்றன. உதட்டைக் கடித்து அடக்கிக்கொண்டு பாடசாலை வளவுள் கிடந்த தேனீர்ச்சாலையைச் சுட்டிக் காட்டி "வாம்மா சசி! பிள்ளையும் நானும் தேனீர் குடித்து வடையும் வாழைப்பழமும்......" என்று நான் கூறிமுடிப்பதற்குள் "வேண்டாம் சார்" என்று பதறிய சசியின் முகம் வாடி இருண்டுவிடுகிறது. நான் மீண்டும் அன்பாக வற்புறுத்தியபோது அழத்தொடங்கி பிடிவாதமாக மறுத்துவிடுகிறாள். இந்தச் சின்ன வயதில் இத்தனை மான உணர்ச்சியா என்று என்னுள்ளம் வியந்ததோடு நின்றுவிடவில்லை. இந்த ஓர் உணர்ச்சியே போதும் இவள் ஊக்கத்தோடு படித்து கல்வியில் மேம்பட்டு சுயமுயற்சியாலே வறுமையை வென்று வளம்பெறுவதற்கும் என்று நான் எண்ணினேன் இன்று அது சரியாகிவிட்டது.

## 21. குணம் சாய்ந்து போனால்!...

தான் கறுப்பு என்பது பெரிய மனக்குறை மெரீனாவுக்கு உயிருக்குயிராக நேசித்து, மதித்து, துணைவியாகத் தழுவிக் கொள்வதாக வாக்களித்துக் காத்திருக்கும் பெருமாள் தன் வகுப்பில் இருப்பதை நினைத்தும் அவள் ஆறவில்லை. பளபள மஞ்சட் பொன்மேனி கொண்ட தன் வகுப்பு மாணவியர் பலரைக் கணம் கணம் வண்டாக வட்டமிடும் மாணவரின் கண்களைப் பார்த்துப் புழுங்கினாள் மெரீனா, அந்தப் புகைச்சல் தீர வகுப்பில் எல்லா ஆசிரியர்களும் தன்னைப் புகழ வேண்டும்! கல்லூரி நிகழ்ச்சிகளிலெல்லாம் தானே தலைமை தாங்கிப் பெருமையோடு உலாவரவேண்டும். இந்தப் புகழ்மூலம் பெரு



மாள் தன்னைக் குறைந்தவளல்ல என்றெண்ண வேண்டும். மற்றும் மாணவர் விழிகளும் தன் பக்கம் அலையவேண்டும் என்ற புகழ் வெறியும் பேராசையும் அவள் நெஞ்சில் இருளாகக் க்ப்பிக்கொண்டன. ஆம்! மெரீனா இதயத்தாலும் கறுத்துவிட்டாள். ஒவ்வொரு பாடத்திலும் நேரிய முயற்சியால் முதன்மை பெற அவளால் முடியவில்லை. பல ஆசிரியர்களிடமும் பலவிதமாகப் பழகி அவர்கள் செல்லமாகிக் குறுக்குவழியில் புகழ் தேடத் தலைப்பட்டாள் அவள். வகுப்பின் ஒரு மூலையில் அமர்ந்தபடி அடக்கமாக இதையெல்லாம் அவதானித்துக் குமுறிய பெருமாள் ஒரு நாள் 'மெரீனா வெறும் புகழைத் தேடப் போய் பண்பை மானத்தை இழந்துவிடக்கூடாது. பண்பும் பரிசுத்தமும் தான் ஒருவர் மேல் உண்மையான அன்பைத் தோற்றுவிக்கும். உன் புகழ் வெறி எனக்கு உன் மேலுள்ள அன்பைக் குறைத்து வருகிறது. இனி உன் இஷ்டம்!" என்றபோது அவள் மௌனமாகத் தலை குனிந்து நின்றாள். மீண்டும் பழைய விளையாட்டு! இடிந்த மனத்தோடு தனிமையில் அழுது தீர்த்துவிட்டு பெருமாள் நிரந்தரமாக அவளிடமிருந்து ஒதுங்கிவிட்டான். அன்பாகப் பழகி வந்த மாணவியரும் சக்கடையாகிநின்ற அவளைப் புறக்கணிக்கத் தொடங்கி விட்டனர். அதற்காகவும் இதற்காகவும் செல்லங் கொடுத்து அவளைக் கொண்டு திரிந்தவர்களும் மெல்ல விலகிக் கொண்டனர். கல்லூரிக்காலம் முடிந்து வீட்டில் முடங்கிய மெரீனாவை அவள் கதையறிந்த அக்காள் தங்கையரும் அருவருத்து வெறுத்துத் தள்ள வாழ்வில் பயங்கரமான தனிமையில் விடப்பட்டு, மனச்சாட்சி குடைந்தெடுக்க எனக்கு இந்த உலகில் யாருமில்லை! என்ற எண்ணம் அவளிதயத்தை வாட்டி வதைக்கலாயிற்று. அன்பின் துணையை அழித்து, வாழ்வின் பிடிப்பை அறுத்து அவள் நிம்மதியையே தகர்த்தெறிந்துவிட்ட பேராசையையும், புகழ்வெறியையும், பெருமாளின் துயரமுகத்தையும் நினைத்து நினைத்து அழுது கலங்குவதைவிட இனி வேறு ஆறுதலேது அவளுக்கு,

## 20. மிருகம், மனிதன், தெய்வம்

அந்த நகர்ப் புறத்துக் கல்லூரியில் நானும் ஓர் ஆசிரியன். அன்று பிற்பகல் கல்லூரி விளையாட்டரங்கில் உதைபந்தாட்டப் போட்டி கரைகடந்த உற்சாக ஆரவாரத்தினிடையே நடந்துகொண்டிருந்தது. அரங்கைச்சுற்றி ஏராளமாக நின்ற மாணவர் கூட்டத்தின் நடுவே "நல்ல காலம்' டா! இன்று காலை வீட்டில் அனுமதி கேட்டிருந்தால், நிச்சயமாக இந்த அருமையான போட்டியைப் பார்த்திருக்கவே முடியாது," என்று எனக்கறிந்த குடும்பத்துப் பையன் ஒருவன் கூறுவது என்காதிலும் பட்டது. வீட்டில் சொல்லாமல் இவன் இங்கு நின்று காலம் தாழ்த்த வீட்டில் இவனைக் காணாமல் பெற்றோர் எப்படி யெல்லாம் கற்பனை பண்ணி நெஞ்சு கலங்குவார்கள் என்று எண்ணியபோது "தனது சுகம், தனது மகிழ்வுக்காக மட்டும் இயங்கும் கொடிய மிருகம்!" என்று என்வாய் முணுமுணுத்துக் கொண்டது. உதைபந்தாட்டம் முடிந்து ஐந்து மணி மஞ்சள் வெய்யிலில் நான் மிதிவண்டியில் வீடு நோக்கிப் போய்க்கொண்டிருக்கையில் அந்த மாணவனின் தகப்பன் பதைத்துத் தவித்து ஓடிவந்தவன் என்னைக் கண்டதும் "சார்! என்மகனை எங்காவது கண்டீர்களா? காலையிற் பள்ளிக்குவந்தவன்! இன்னுங் காணவில்லை!" என்று மூச்சு இரைக்க இரைக்கத் திணறினான். உடலெல்லாம் உடையெல்லாம் தோட்டப் புழுதி வியர்வையில் கசிந்து கொண்டிருந்தது. அவன் மகன் வழியில் வந்துகொண்டிருப்பதாக நான் கூறியபோது "வரட்டும் இன்றைக்கு" என்று குமுறினான் அவன். "கடமைக்கும் பாசத்துக்குமிடையில் நின்று தத்தளிக்கும் அசல் மனிதன்" என்று என் மனம் கணக்கெடுத்துக் கொண்டது! அங்கிருந்து புறப்பட்டு அவன் வசிக்கும் வீட்டையும் தாண்டி மிதிவண்டியில் நான் வந்துகொண்டிருந்தபோது அவனது தாய்க்கிழவி நாவடிவைப்பதும் குந்துவதுமாக எதிரில் வந்துகொண்டிருந்தாள். முன்தானை மடி கனத்துத் தொங்கிக்கொண்டிருந்தது. அவளருகில் மிதிவண்டியை நிறுத்தி இறங்கினேன். கண்களைக் கூசி என்னைப் பார்த்தாள். "வாத்



தியாரே! என்ர பொடியனுக்கு மரவள்ளிக்கிழங்குத் துவையல் என்றால் நல்ல ஆசை! மாதாமாதம் பசி கிடந்தென்றாலும் கிழங்கு வாங்கி அவிச்சுத்துவைச்சுக் குடுக்காவிட்டால் உறக்கம் வராதாம் தம்பி! பிள்ளைக்கு என்ர வீட்டுக்கு வரவும் நேரமிருக்காது! பாவம் குழந்தை குட்டிக்காரன் அதுதான் நான் இருந்து இருந்தென்றாலும் 'போய்ச் சேரலாமென்று வெளிக்கிட்டனான்" –என் உடல் எங்கும் கூதலோடிற்று! அந்தத்தியாக வடிவம் என் கலங்கிய கண்களுக்குத் தெய்வமாய்த் தெரிந்தது.

★

## 22. தண்டல் காரர்களா?

இன்று ஈழநாட்டில் ஆயிரக்கணக்கான இலக்கியப் பிரமாக்களும், இலக்கியச் சிந்தனைகளும் இரசனையுணர்வும் பெருகி நிற்பதற்குக் காரணம் கடந்த காலத்தில் இங்கே ஒருவர்பின் ஒருவராக இலக்கியப் பித்தர்கள் பலர் வாழ்ந்து இலக்கியப் பத்திரிகைகள் வெளியிட்டுச் சொத்துச் சுகங்களைக் கரைத்து' ஓட்டாண்டிகளாகி மனைவி மக்களுடன் நடுத்தெருவில் நின்றமைதான் நம் நாட்டில் பத்திரிகையாளர்களுக்கு ஏனிந்தக்கதி பரம்பரை பரம்பரையாக ஏற்பட்டுவரவேண்டும்? என்று எனக்கு விளங்கவில்லை. இன்று ஆயிரக்கணக்கில் சிறு கதைகளை கவிதைகளை, நாவல்களை, விமர்சனங்களை, அரசியல் ஆய்வுகளைக் காவியங்களை எழுதித் தள்ளிக் கொண்டிருக்கும் நூற்றுக்கணக்கான புதிய தலைமுறை எழுத்தாளர்களை இலக்கிய உலகுக்கு அறிமுக மாக்கிப் பிரபலப்படுத்தி வைத்த "கலைத்தென்றல்" மாத சஞ்சிகையின் ஆசிரியர் சரவணனிடம் இச்சந்தேகத்திற்கு விடை அறியக் கிளம்பினேன். "இந்த உண்மையை இன்னுமா நீங்கள் அறிந்து கொள்ளவில்லை? கொஞ்சம் பொறுங்கள்! நேரில் கண்டறியலாம்!" என்றார் அவர். அப்பொழுது இருவரும் கீரிமலைக் கடற்கரை மணலில் பூவரச மரத்தின் கீழே உட்கார்ந்து அந்திக் காற்றை மாந்திக் கொண்டிருந்தோம். எங்களைச் சூழ்ந்து பலதரப்

பட்ட மக்கள் காற்று வாங்கி நடமாடிக் கொண்டிருந்தனர். அந்தச் சன சந்தடியில், தூரத்தில் "வாங்குங்கள் கலைத் தென்றல்! ஆனி இதழ் முப்பது சதம்!" என்று கூவுவது கேட்கிறது. "ஈழத்துச் சூழ்நிலையில் எழுந்த சிறுகதைகள். இனிக்கும் கவிதைகள், இலக்கிய விமர்சனங்கள் அலங்கரிக்கும் கலைத்தென்றல்..." குரல் எம்மை நெருங்கிக் கொண்டிருந்தது. இதோ பத்திரிகை விற்பனையாளன்! சரவணன் அவனை அழைத்து "எத்தனை போயின?" என்றார். "கத்திக் கத்தி என் தொண்டைதான் சார் போயிற்று!" என்றான் அவன் சலிப்போடு! "உனக்குத் தொண்டைதான் போயிற்று எனக்குச் சொத்துச் சுகங்கள் வீடு வாசல் எல்லாம்போய் கடன்காரர்களால் என் தலையே போகப்போகிறது" என்று அவர் எண்ணியிருப்பாரோ என்னவோ! தூரத்தில் கடல் நீரலைகள் வந்து வந்து கால்களைக் கழுவிச் செல்லச் சிவக் கோலத்தில் நின்ற ஒருவரை அணுகிய விற்பனையாளன் கலைத்தென்றல் பத்திரிகையை நீட்டி "எடுங்களேன் ஐயா!" என்றான். அவர் நாடறிந்த ஒரு பேச்சாளர், பண்டிதர், சைவப்புலவர். தமிழ்க் கலைகளுக்காக, ஈழத்து இலக்கிய தனித்துவத்துக்காக மாரடிப்பவர் "தண்டல் இப்படியுமா?" என்றவர் "தேவையில்லைப்போ," என்று கூறிய சொற்கள் என் நெஞ்சில்பழுக்கக் காய்ச்சிய வேல்களாகப் பாய்ந்தன. இவர்களே இப்படி என்றால் சாதாரணமாகப் படித்த தமிழன் எப்படி இருப்பான்? எனக்குச் சரவணனைப் பார்த்தபோது அழவேண்டும் போல் இருந்தது.

★

## 23. இன்றையும் அழித்த நாளை!

மகள் அகாலத் தாய்மை எய்தி நிற்பதை மனைவி கூறக் கேட்ட மரியாம்பிள்ளை அதிர்ச்சியில் மயக்கம் போட்டு நாற்காலிக்குள் விழுந்தே விட்டார். அந்த மயக்கத்தைச் சாதாரண அதிர்ச்சியாக எண்ணி எல்லாம் இவளால்தானே என்ற ஆவேசத்தோடு அருகிலிருக்கும் சமயற் கட்டுக்கோடினாள் மனைவி ஞானம்பாள். அங்கே உப்பிய வயிற்றுடன் விம்மி விம்மி அழுது நின்றாள் மார்க்கிரெட்! பத்திர



காளியாகிக் கண்களில் தீப்பொறி பறக்கவந்து நின்ற ஞானம்பாள் அவள் குலைந்த கூந்தலைப்பிடித்து உலுக்கி ஆட்டியபடி "அடியே! மானங்கெட்ட நாயே! குடிகேடி உண்மையைச் சொல்லிவிடு! யார் அந்தக் கொடியவன்?! எவன்டி அந்தப் பாதகன்!... சொல்லேண்டி சண்டாளி" என்று முடுக்கினாள்! வாட்டும் மனச்சான்றிற்கும், வதைக்கும் அன்னைக்கும் வகைசொல்ல முடியாமல் "சரியாகச் சொல்லமுடியாதம்மா" என்று அரற்றினாள் அவள். "என்னடி சொன்னாய்! எவன் என்று சரியாகச் சொல்லமுடியாதா? அப்படியானால் ஐயோ... நீ பலரோடு ஆடி...ஆ...?" அவளும் மயங்கி விழுந்தாள். சுவருடன் சாய்ந்து சோர்ந்து நின்ற மார்கிரெட் தன் மறைக்கமுடியாத களங்கத்தை, மன்னிக்கமுடியாத குற்றங்களை எண்ணிக் கலங்கினாள். "இது பெண்பிள்ளை! நாளை கணவனாக வருபவனும் எப்படியான ஆளாக இருப்பானோ! எங்களோடு இருக்கும் மட்டுமாவது இவள் சுதந்திரமாக சந்தோஷமாக இருக்கவேண்டும்!" என்ற மரியாம்பிள்ளை மனைவி தடுத்ததையும் கேளாமல் தம்மகளை நம்பி, விரும்பியபடி உடுக்கவிட்டு, நினைத்த இடமெல்லாம் தனியே திரிய அனுமதித்து கண்டவர்களோடும் பழகவிட்டு வந்தார். பஸ்ஸில் நசிந்தும், திருவிழா நெரிசல்களில் இடிபட்டும் சினிமாக் காதற் காட்சிகளை தியேட்டருள் தானும் நடத்தியும், அடக்கத்தை முற்றாகத் துறந்துவிட்ட மார்கிரெட் பல இளைஞர்களுக்கு மலிந்த சரக்காகிவிட்டாள்! அதன் பலன்? இன்று எவனுமே அவளை ஏற்க முன்வரமுடியாத நிலையில் குடும்ப மானமே கப்பலேறப் போகிறது. ஆம்! தந்தைக்கிருந்த அவளின் நாளையைப் பற்றிய பயம் அவளது இன்றையும் சேர்த்துப் பாழடித்து விட்டது. நீண்டநேரம் யோசித்து நின்றவளுக்கு தங்கள் குடும்பமானம் காக்க கவலைபோக்க ஒரே ஒரு வழிதான் தென்பட்டது. மயக்கமாகக் கிடக்கும் பெற்றோர் விழிக்கமுன் அவள் விழித்துக் கொண்டதன் பலன்— மூன்று பிணங்கள் வெந்து கிளம்பும் நெடியோடு அதோ அந்த மாளிகையை விழுங்கிய தீச் சுவாலைகள் வானோங்கிக் காற்றிலாடி அசைகின்றன.

★

# 24. செக்கு மாடு! மக்குமண்டை!

இரவுப் பாடவகுப்புக்குப் போவதாக வீட்டில் ,சொல்லி
விட்டுப் படம் தொடங்கும் நேரம் பார்த்து அந்தத்
தியேட்டருள் நுழைந்து கொண்ட ஜெயம் ஒரு முக்காடிட்ட
தும்புக்கட்டு மீசைக்காரனுக்குப் பக்கத்திலிருந்த காலி
ஆசனத்தில் அமர்ந்து கொண்டான். படம் தொடங்கி விட்
டது. சிரித்தும் கண்ணீர் விட்டும் ஆத்திரப்பட்டும் படத்
திலே ஒன்றியிருந்த ஜெயத்துக்கு மறுபக்கத்திலிருந்தவர்
ஓர் அம்மையாராக இருந்ததால் அவரிடம் அவன் பேசத்
துணியாமல் முக்காடுகாரன் பக்கம் திருப்பி 'என்ன அரு
மையான படம்! நைட்கிளாசைக் கட் பண்ணினாலும் பரவா
யில்லை" என்றான். அந்த அயலவரும் "ஆமாம்! நல்ல
படம்!" என்றார் சரகரத்த குரலில்! "நான் பகல் ஷோ
பார்த்திருப்பேன் பள்ளிக்கூடத்தில் அதிபர் இரண்டாம்
தடவையும் வார்ண் பண்ணி விட்டார்!" "ஆ! அப்படியா?
பாவம்" கரகரத்த குரல் பரிந்தது. "பரவாயில்லை. கேட்ட
நேரமெல்லாம் அம்மா பணந்தருவதால் ஒரு படமும் நான்
தவறவிடுவதில்லை"! அயலவர் குரல் மீண்டும் கரகரத்தது;
'ஏன்? அப்பா இல்லையா?" "அந்தச் செக்கு மாட்டுக்கு
இந்தச் சினிமா அருமை எங்கே தெரியப்போகிறது? பட
மாளிகைப்பக்கம் நான் தலைகாட்டப் படாதென்பது அதன்
கட்டளை! அந்த மக்கு மண்டைக்கு என் 'டூப்' எட்டினால்
தானே!" என்று சொல்லிக் கொண்டிருந்தவன், பட்டத்தில்
ஒரு நகைச்சுவையைக் கண்டு "ஹோவென்று சிரித்துத்
துள்ளி விழுந்தபொழுது அந்த அயலவரின் முகத்தில் அவன்
கைபட்டு அங்கிருந்த தும்புக்கட்டு மீசை கழன்றுவிழ
முக்காடும் வழுகிப் பிடரிப்பக்கம் போய்விட "மன்னிக்க
வேண்டும்" என்றபடி அவர்பக்கம் திரும்பித் திடுக்கிட்டு
ஆளை உற்று உற்றுப் பார்த்தான். மறுகணம் பதறி எழுந்து
உள்ளே இருந்தவர்களையும் மிதித்துழக்கிக் கொண்டு,
விழுந்த ஏச்சுக்களையும் பொருட்படுத்தாமல் விழுந்தடித்
தோடி வெளியேறுகிறான். அவன் வெறிச்சோட விட்டிருந்த



ஆசனத்துக்கு அயலவனாகிவிட்ட பழைய மீசைக்காரன் வெற்
றிப் பெருமிதத்தோடும் சற்றே ஆத்திரத்தோடும் சிரித்துக்
கொண்டிருந்தார். அது வேறுயாருமல்ல; அவனது செக்கு
மாடு மக்கு மண்டை அப்பாவேதான்.

★

# 25. இப்படியும் ஒரு பெண்!

கைகளுள் முகத்தைப் பொத்திக் கொண்டு குலுங்கி
னாள் சுசீலா. "உங்களை என்று கண்டேனோ, அன்றே என்னை
நான் இழந்துவிட்டேன். நீங்கள் மணமானவர் என்று
சொல்லி என் காதலை மறுத்த பின்னும், என்னை வெறுத்து
ஏசிய பின்னரும், நான் தொல்லை கொடுப்பதாக நீங்கள்
மேலிடத்தில் புகார் செய்ததை அறிந்தும், நான் வேலை
நீக்கம் செய்யப்பட்டும் இன்று சோற்றுக்கும் சேலைக்குமே
வழியற்று நடுத்தெருவில் நிற்கும் போதும், உங்களை என்
னால் கோபிக்க முடியவில்லை. எவ்வளவோ முயன்றும்
வெறுக்க முடியவில்லை. மறக்க முடியவில்லை."

"என் மனைவிக்கு மட்டும் இப்படி ஒரு பாசம் என்மீ
திருக்கக் கூடாதென்று எண்ணுகிறீர்களா?" — சேகர் கல்
மனங்கலங்காமல் கேட்டான்.

"இருக்கட்டுமே! அவர்களும் உங்களுக்குரியவராக
இருக்கட்டுமே! சேகர்! என்னால் உங்களைப் பிரிந்து வாழ
முடியவில்லை. சமூகம் பெரும்படியாக அமைத்த கட்டுப்பாடு
கள் என்விடயத்தில் பலமற்று நிற்கின்றன. நான் என்ன
செய்வேன்!" — அவள் தேம்பினாள்! அந்தச் சில வினாடிகள்
நிலவிய பயங்கர அமைதியின் நடுவே...... ஒரு சோதிடன்
சேகரின் சாதகத்தைப் பார்த்து அவனுக்கு நிச்சயம் இரு
மனைவியர் இருப்பர் என்றபோது அவன் அப்பா கவலைப்
பட்ட நிகழ்ச்சியும், அவன் திருமணம் புரிந்த புதிதில்
கோயில் சென்று தன் இல்லற வாழ்வில் புயல் கிளம்பாமல்
காக்கும்படி வேண்டியழுத அனுபவமும் நினைவில் வந்து
போகின்றன.

சுசீலா! கையிலிருந்த புட்டியொன்றை சேகரிடம் நீட்டி, "இந்தாருங்கள்! உங்கள் கையால் இதைத்திறந்து தாருங்கள். சாவிலாவது நிர்மதியை அளியுங்கள்" என்று கெஞ்சிச் சோர்ந்து அழுதபோது சேகர் உடல் பதற அவளை மிரண்டு மிரண்டு உற்றுப் பார்த்தான். அவன் நெஞ்சம் அதிர்ந்து, கலங்கி, நைந்து உருகி, இரங்கிப் பதைத்து, ஆவேசப்பட்டு, "சுசீலா!" என்று அலறிக் கொண்டே அவளை இறுகக் கட்டி அணைத்துக் கொண்டான். அவள் சிக்கேறிய கூந்தலும் அழுக்கேறிய முதுகுச் சட்டையும சேகரின் கண்ணீரால் நனைந்து கொண்டிருந்தன. "உங்கள் முதல் மனைவிக்கு இரண்டு கால்களும், அவற்றைக் கட்டிக் கொண்டு கெஞ்சிக் கண்ணீர் வடிப்பதற்கு எனக்குப் பொறுமையும் உள்ளவரை, நீங்கள் பயப்பட வேண்டாம்!" அணைப்பில் இருந்தபடி சுசீலா ஆனந்தமாகப் பேசினாள்.

★

# 26 உனக்காக உயிர்வாழ்வேன்!

"நீ வேறு இதற்குள் பிறந்து விட்டாயே!" என்று மடிக்குள் கிடக்கும் மலர் மேனிக் குழந்தையின் முகத்தைப் பார்த்து ஆவேசம் பொங்க ஆனந்தி கத்தியபோது ஒரு பாவமும் அறியாத அந்தக் குழந்தை திடுக்கிட்டுப் பயந்து மருண்டு பார்த்து வீலென்றலறுகிறது. அதைத் தூக்கித் தோளில் போட்டுப் பொருமியவள் "எங்காவது ஆற்றிலே குளத்திலே என்றாலும் விழுந்து சாகவும் வழியில்லையே!" என்று தேம்பித் தேம்பி அழுகிறாள். ஈற்றில் குழந்தையின் முகத்தை நிமிர்த்திப் பாசத்தோடு பார்த்து விட்டு, அதன் அலறல் நடுவே "நான் சாகமாட்டேன் 'டி உன்னை விட்டுச் சாகமாட்டேன் 'டி கண்ணு!" என்று பதறிக் குழந்தையை இறுக அணைக்கிறாள். அவள் கணவனுக்கு பல மோகினிகள் என்ற ஊர்ப்பேச்சு அவள் காதிலும் விழுந்ததால் ஏற்பட்ட பூகம்பம் தானிது. இந்தப் பிள்ளையின் முகத்தைப் பார்த்துக் கொண்டே என் வாழ்நாளை ஓட்டிவிடுவேன்!" என்று முணுமுணுத்த ஆனந்தியின் மனத்தில் ஒரு ஞாபகம்



மின்னலடித்துச் செல்கிறது. அவள் நான்கு வயதுச் சிறுமியாக இருந்த காலத்தில் தாய் கமலமும் இப்படித்தான் பல தடவைகள் அவளைக் கட்டிக் கொண்டு, "உன்னை விட்டுச் சாக முடியவில்லையேடி" என்று அலறியிருக்கிறாள். அப்படியானால் ஆனந்தியின் அப்பாவும் வேறு பெண்களோடு...? ஓகோ தலைமுறை தலைமுறையாக இதே கதை தானா? ஆண்கள் கட்டிய மனைவிமார்க்குத் துரோகமாக நடப்பதும், அப்பேதைப் பெண்கள் சாக நினைப்பதும், பின்பு பிள்ளைகள் முகம் நோக்கி, அவர்கள் பிற்காலத்தை நினைத்து, தற்கொலை எண்ணத்தைக் கைவிடுவதும் பாரம்பரிய வழக்கமோ? அப்படியானால இந்தக் குழந்தையும் நாளைக்கு மணமாகித் தாயாகி இப்படி அழநேர்ந்து...... தற்கொலையைத் தழுவி...! சேச்சே! அவள் பெற்ற குழந்தையின் முகம் அப்பொழுது அவளை சாகாமற் காத்துவிடும். என்று பெருமூச்சுவிட்ட அன்னை கண்ணீரைத் துடைத்துக் கொண்டு "அடியே கள்ளி! உன்னை ஏமாற்றப் போகிறவனும் எங்கே பிறந்திருக்கிறானோடி" என்று கொஞ்சியபோது. குழந்தைதன் பொக்கை வாயைத் திறந்து தாமரையாகச் சிரிக்கிறது.

★

# 27 நாமார்க்கும் குடியல்லோம்!

'சங்கொலி' பத்திரிகை நிறுவனத்தின் முதலாளி முகத்தில் எள்ளும்கொள்ளும் வெடிக்கலாயின. குகையில், சிங்கத்தின் முன்னால் வகையாகச் சிக்கி நிற்கும் ஆட்டுக்குட்டி போலப் பதறிக் கொண்டு ஒடுங்கி உட்கார்ந்திருந்தார், பத்திரிகை அலுவலக மனேஜர். 'யாமார்க்கும் குடியல்லோம்' என்ற நெஞ்சு நிமிர்ச்சியோடு உறுதி ஒளிரும் முகமும் கண்களுமாக வீற்றிருந்தார், 'சங்கொலி' ஆசிரியர் தமிழ்நெஞ்சன்! அவரைப் பார்த்து அதிகார மிரட்டலோடு பேசினார் முதலாளி. "என் அண்ணன் மகள் எழுதிய ஒரு விஞ்ஞானக் கட்டுரை, என் மனைவியின் சமையற் கலைக்கட்டுரை, மகள் எழுதின, கவிதை, நான் எழுதிய அரசியற் கட்டுரை இவை எல்லாம் தந்து எத்தனை நாட்கள்? ஏன் இன்னும் போடவில்லை"?

"ஏன் போடவில்லை? போட்டேனே
குப்பைக் கூடைக்குள்!" என்று நையாண்டி பண்ண
ஒருகணம் எண்ணிய தமிழ்நெஞ்சன், சட்டென்று "பேச
வேண்டியதை மனேஜரோடு பேசலாம்" என்று கணீரிடும்
குரலில் நறுக்குத் தெறித்தாற்போல் பதில் சொல்லி
விட்டார். "இதென்னடா சங்கடமாகி விட்டது"! என்று
அருண்டு விழித்த தொடை நடுங்கி மனேஜருக்கு "ஒரு
கூலிக்காரப் பத்திரிகை ஆசிரியனுக்கு இத்தனை திமிரா?
அதுவும் முதலாளிக்கு முன்னால்?" என்று கோபம் வந்தா
லும், அந்த மலட்டுக் கோபம் தானாக அடங்கி விட, "சொல்
லுங்கள் இன்னுமேன் போடவில்லை"! என்று ஆசிரியர்
பக்கம் திரும்பினார். "முதலாளிக்கு வேண்டியவர்களின் விட
யங்கள் எல்லாவற்றையும் தரமா? தரம் இல்லையா? என்று
பார்க்காமல் வெளியிடுவதானால் ஆசிரியன் என்று நான்
ஒருவனேன் இங்கு இருக்கவேண்டும்? வாசகர்களை ஏமாற்றி,
பத்திரிகை உலகில் எனக்கிருக்கும் நல்ல பெயரைப் பலி
கொடுத்து, குறுக்கு வழியில் தாங்கள் பிரபலமடைய நினைப்
பவர்கள் முதலாளிகளாக இருந்தாலென்ன வேறு யாராக
இருந்தாலென்ன நான் அனுமதிக்கவே மாட்டேன்" என்று
பேசிச் சென்ற பத்திராதிபர் குடையையூன்றி அந்தரத்தில்
எழுந்த முதலாளி சொல்ல வந்ததை தானே முந்தி ஏற்
றுக் கொள்வது போல் பட்டென்று "நான் இன்றுடன்
வேலையிலிருந்து விலகிக் கொண்டுவிட்டேன்!" என்று முழங்கி
முடித்தார். மறுகணமே எழுந்து ஏறு நடையோடு வெளி
யேறினார், அந்தக் கட்டைப் பிரமச்சாரி.

★

## 28. பெண் கேட்க வரவில்லை

"உன்மகன் மாமனார் கடையில் ஐந்நூறு ரூபாவைத்
திருடிவிட்டானாமே?" அடுத்த வீட்டு மீனாட்சியின் விசாரணை
கேட்டு, லட்சுமியின் ஏழைநெஞ்சம் பற்றி எரியலாயிற்று
இந்த அபாண்டமான பழியை அவள் மறுப்பதெப்படி? "என்
னவோ அக்கா! ஆண்டவனுக்கும் கண்ணில்லாமலா போய்
விடும்?" அவள் பொருமினாள்.



தன் பத்தாம் வயதில் தகப்பனைத் தின்னியாகி விட்ட
வேலுவை இலட்சுமியின் அண்ணன் கனகலிங்கம் தன்
கடையில் வேலைக்கு அமர்த்திக் கொண்டார். அவன் சுறு
சுறுப்பான உழைப்பால், வாடிக்கையாளரை வசீகரிக்கும
திறமையால், நேர்மையால் அவன் மாமாவுக்கு இலாபம்
பெருகி காணி பூமிகள் மாடி மனைகள் பெருவாரியாகச்
சேர்ந்து விட்டன. ஆனால் வேலுவுக்குக் கிடைத்து வந்த
தெல்லாம் கடைச்சிப்பந்திக்குரிய சம்பளம் மட்டுமே! கனகலிங்
கம் பணத்தால் பெரிதாக, அவர் ஒரே மகள் மங்களம் பரு
வத்தாற் பெரிதானாள். அப்பொழுது வேலுவுக்குப் பதி
னெட்டு வயது. கடைக்கு வரும் வாடிக்கையாளர்கள் வேலு
வுக்கும் மங்களத்துக்கும் முடிச்சுப் போட்டுக் கேலி பண்ணு
வது ஒரு நாள் கனகலிங்கத்தின் காதிலும் படவே செய்
தது. டாக்டரையோ, எஞ்சினியரையோ, மருமகனுக்கக் கனவு
கண்டு கொண்டிருந்த கனகலிங்கத்துக்கு இந்த விளையாட்
டுப் பிடிக்குமா? அவனை வேலையிலிருந்து விரட்டி அவன்
குடும்பத்தையே தூரவைக்க அவர் போட்ட திட்டம்தான்
இந்த அநியாயமான திருட்டுக் குற்றச்சாட்டு!

லட்சுமிக்கு எல்லாம் புரிந்து விட்டது நெஞ்சம் வெந்து
குமுறப் பற்றியெரியும் வயிற்றோடு எழுந்தாள். கட்டியிருந்த
கந்தற் சேலையோடு கனகலிங்கம் வீட்டுப் படலையைத்
திறந்தபோது அவர் முற்றத்தில் திருநீற்றுக் குறிவைத்து
அனுட்டானம் பார்த்துக் கொண்டு சிவவேடப் பொலிவோடு
குந்தியிருந்தார். எதிரில் போய் நின்ற லட்சுமி "இதோ
பாருங்கள்!" என்று சீறியபோது, அவர் திடுக்கிட்டு நிமிர்ந்
தார். "உங்கள் வீட்டில் பெண் கேட்க நாங்கள் என்றுமே
நினைத்ததில்லை. நாங்கள் ஏழைகள்! இனிமேல் உங்களோடு
உறவாட வந்து தொல்லைப் படுத்தவும் மாட்டோம். உங்க
ளுக்குப் புண்ணியம் கிடைக்கும். உங்கள் பணக்கார மகளைப்
பட்டத்தரசியாக்கு வதற்காக, என் ஏழைப் பிள்ளையைத் தற்
கொலை பண்ண வைக்காதீர். அநியாயமாக என்பிள்ளையைத்
திருடனாக்கிக் கதை கட்டாதீங்க அண்ணனைச் சிலையாக்கி
விட்டு குமுறியழுது கொண்டு பாரங்களையும் நெஞ்சோடு
திரும்பி நடந்துகொண்டிருந்தாள் லட்சுமி.

★

## 29. கர்ம வியாதி

இரவு பகலாக உபத்திரவப் படுத்தும் மார்பு வலியும் பணக்கார மனைவியின் அலட்சியப் போக்கும் சேர்ந்து வருத்த காசிலிங்கம் பெருமூச்சோடு நித்திரைப்பாய் விட்டெழும்பி அறை வாசலுக்கு வந்தான். கையிலிருந்த தண்ணீர்ச் செம்பை வாசல் படியில் பட்டென்று அடித்து வைத்த மனைவி சிவபாக்கியம் "இப்படி நித்தச் செத்த வீட்டுக்குப் பதிலாக..." என்று நிறுத்திய பாதி வாக்கியத்திற்குத்தான் எத்தனை பயங்கர சக்தி! எவ்வளவு கொடூரம்! காசிலிங்கம் என்றைக்கு அவள் கணவனாக நிச்சயிக்கப்பட்டானோ அன்றே பற்றிய மார்பு வலி! உள்நாட்டு வைத்தியம் பார்ப்பவர்கள் சரி, புறநாட்டு மருத்துவம் பயின்ற வைத்திய மேதைகள் சரி எவ்வளவோ முயன்றும் எள்ளளவும் குணப்படுத்த முடியவில்லை. நோயில் உழன்று நலிந்து காற்றிலாடும் காய்ந்த புல் போலாகிவிட்ட காசிலிங்கம் தன் வைத்தியச் செலவுக்காவது உதவட்டுமே என்று ஆசிரியத் தொழிலில் ஒட்டிக் கொண்டிருந்தான். கொழும்பு வந்திருக்கும் ஹோப் கப்பலும் கடைசியாக அவனுக்கு நோய் இருப்பதையே ஒப்புக்கொள்ள மறுத்து நேற்று அவனைத் திருப்பி அனுப்பிவிட்டது. ஐம்பதினாயிரம் ரூபா சீதனத்தோடு வந்தவள்தான் என்ற மமதையில், அவன் நோய் வேதனையை மனத்துயரைக் குறைக்க அன்பாக ஒரு சொல் பேசுவதற்கே மறுத்து வந்தவள் நேற்று "இவரில் இனி வேலையில்லை" என்பது தீர்மானமாகத் தெரிந்ததும், இன்று அவனைச் செத்துத் தொலையச் சொல்லும் அளவுக்கும் வந்துவிட்டாள். கண்ணிலூறிய நீரையும் முகத்தையும் சேர்த்துக் கழுவித் துடைத்துக்கொண்டு வந்த காசிலிங்கம் ஆர்வத்தோடு ஓடிவந்த தன் ஒரே மகனை, மூன்றுவயதுக் குழந்தையை வாரி எடுக்கப் போனபோது "தில்லுங்கள்! பிள்ளைக்கும் நோய் தொற்றிவிடும்!" "சிவபாக்கியம் கத்தினாள். தொற்றாநோயைத் தொற்றிவிடும் என்று இன்று புதிதாகச் சொல்கிறாளே என்று குமுறியவன் "உன் விருப்பம்போல் நான் செத்துவிட்டேன் என்று



எண்ணிக்கொள். நான் இனியும் உனக்குச் சுமையாக இருக்கமாட்டேன்" என்று துக்கம் தொண்டையை அடைக்கக் கூறிவிட்டுக் கட்டியவேட்டியுடன் தெருவில் இறங்கியபோது சிவபாக்கியம் அவனைத் தடுக்கவில்லை. "தொலையட்டும்" என்று அவள் முணுமுணுத்ததும் அவன் காதில் படத்தவறவில்லை. ஊணுறக்கமின்றி எங்கெங்கோ அலைந்து மூன்றாம் நாள் செல்வச் சந்நிதிக்கு வந்து சேர்ந்த காசிலிங்கம் கோயில் வாசலில் பசிக்கும் வயிறும், வலிக்கும் மார்பும் கொதிக்கும் மூளையும் கசியும் கண்களுமாக இருந்தபோது "யார் நீங்களா?" என்ற அலறல் கேட்டு நிமிர்ந்தான். ஒரு கன்னிப்பெண் "வாருங்கள் வீட்டுக்கு!" என்று கண்களாலும் குரலாலும் கெஞ்சிநின்றாள். அந்த நொடியில் பாதி மார்பு வலி பறந்து விட்டது. காரில் அவளருகில் அமர்ந்து போய்க் கொண்டிருக்கையில் பூரண குணமாகி அவள் கன்னங்களைக் கண்களால் ரசித்துக் கொண்டிருக்கும் வாலிபனாகிவிட்டான் அவன்.

"இது கர்மவியாதி! உங்கள் மேல் தன் உயிரையே வைத்து ஏங்கிக் கொண்டிருக்கும் ஒரு பெண்ணின் பெருமூச்சு நிற்கும்போதுதான் இந்த நோய் குணமாகும்."— ஒரு ரேகை சாஸ்திரி கூறியது காசிலிங்கத்தின் மனச் செவிகளில் எதிரொலிக்கிறது.

★

## 30. நூறு பரப்பு நிலம்!

மருதப்பர் கிணற்றடி ஆடுகாலின் நிழலிலமர்ந்துசாமைப் பழங்கஞ்சியைச் சிரட்டையில் ஊற்றிக் குடித்துக் கொண்டிருந்தார். அவர் மனைவிக்குச் சீதனமாகக் கிடைத்திருந்த நூறு பரப்புக் காணியில் எண்பத்தைந்து பரப்பை கடந்த பதினைந்தாண்டுகளில் விற்றழித்துவிட்டார். இதை எண்ணிக்கொண்டபோது தமது ஏமாளித்தனத்தின் மேலும், முகுந்தனின் புத்தி சாதுரியத்தின் மேலும் ஆத்திரம் ஆத்திரமாக வந்து அவருக்கு வயிறுபற்றி எரியலாயிற்று கல்

யாணம் செய்த புதிதில் சீதனத் தோட்ட நிலத்தில் புகையிலைக் கன்று வைப்பதற்குக் கைமுதல் இல்லாமல் கஷ்டப்பட்டு, கடைசியில் முகுந்தன் என்ற அயலூர்ப் பணக்காரன் ஒருவனிடம் வட்டிக்குப் பணமெடுத்து அவர் புகையிலைக் கன்று நாட்டிய, தை மாதத்தில் பக்கத்துத் தோட்டங்களில் எல்லாம் புகையிலைக் கன்றுகள் மதமதவென்று வளர்ந்து நின்றன. முடிவில் பருவத்தே பயிர்செய்யாத குறையால் அவர் புகையிலைக் கன்றுகள் மரங்கன்றுகள் போலாகி, இட்ட முதலில் கால்வாசி கூடத் தேறவில்லை. வேறு வழியின்றி மனைவி அன்னத்தை மன்றாடி 5 பரப்புக் காணியைக் கடன்காரனுக்கு எழுதிக்கொடுத்தார். அடுத்தவருடமும் பணமில்லாமல் நேரகாலத்தோடே முகுந்தனிடம் கடன் கேட்கச் சென்ற மருதப்பர் நூறு நடை நடந்து அலுத்த பின்னர் அவ் வருடமும் முன்போலவே தை மாதத்திலேயே பணங் கிடைத்து, புகையிலைக் கன்று நாட்டி, முந்தின ஆண்டு போல் நட்டப்பட்டு, மீண்டும் 5 பரப்புக் காணி முகுந்தனுக்கு எழுத நேர்ந்துவிட்டது. முதல் தடவை ருசிப்பட்ட முகுந்தன் தொடர்ந்தும் பிந்திப் பிந்திக் கடன் கொடுத்து பதினைந்து வருடங்களில் 75 பரப்புக் காணியை மருதப்பரிடமிருந்து குறைந்த விலையில் அமுக்கிக் கொண்டான். இந்த ஆண்டுதான் மருதப்பருக்குப் புத்தி வந்து பத்துப் பரப்புக் காணியைப் புரட்டாதி மாதத்திலேயே வேறொருவனுக்கு விற்று காசை வாங்கி, கார்த்திகை மழையில் நனைந்து நனைந்து புகையிலைக் கன்று வைத்துவிட்டார். கருகருவென்றிருக்கும் புகையிலைக்கன்றின் அகன்ற இலைகள், காற்றில் புரண்டு அலைபாய்வதைக் கண்டு நெஞ்சில் இன்பம் சுரந்து பெருக, சிரட்டையை வாய்க்கால் மணலில் போட்டுவிட்டு எழுந்தார் மருதப்பர்.



# 31. ஆனந்தரகசியம்!

நான்கு ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் பனைவடலிகளும் நெடும்பனந்தோப்புகளும் மலிந்த அந்தத் தூரத்துக் கிராமத்திலிருந்து வைகறை இருளில் புறப்பட்டு நடந்து வந்து எங்கள் வயலில் வேலைசெய்து கூலியும் வாங்கிக்கொண்டு மாலையில் மனநிறைவோடு தன்னூர் திரும்பும் மாரிமுத்து எத்தனை உந்சாகமாக ஆனந்தமாக அந்த ஐம்பது வயது முதுமையிலும் காணப்பட்டான்: எனக்கு இருபத்தைந்து வயதிலேயே, நடத்தும் இல்லறம், பார்க்கும் உத்தியோகம், ஆண்டனுபவிக்கும் சொத்துச் சுகங்கள் எல்லாமே வெறுத்து வாழ்வே சுமையாகிவிட்டதே! அவனது ஆனந்தவாழ்வின் அடிப்படை இரகசியத்தை அறிந்து என் வாழ்வைத் திருத்தி அமைத்துக்கொள்ளும் வேட்கையில் பஸ் ஏறினேன். அவன் சொந்தமாக வயல் வாங்கிவிட்டதாக அவன் மனைவி கூறியபோது எனக்கு இன்னும் வியப்பாக இருந்தது. அவளுடன் நின்ற பிள்ளைகளைத் தற்செயலாக எண்ணத் தொடங்கி, தொகை பதினான்கையும் தாண்டுவதைக் கண்டு கூச்சப்பட்டு, எண்ணுவதை அவ்வளவில் நிறுத்திக் கொண்டேன். மாரிமுத்துவைத்தேடி நான் வயலை அடைந்தபோது அவன் களைபிடுங்கிக் கொண்டு நின்றான். என்னைக் கண்டானோ இல்லையோ "வாருங்கள் தம்பி வாருங்கள்" என்று குதூகலித்தபடி கையிலிருந்த களைப்பிடியை வயல் வரப்பில் வீசி எறிந்துவிட்டு ஓடோடி வந்தான். முடி சடைபின்னி, தாடி சுருண்டுவிட்டாலும் முன்பிருந்த அதே உற்சாகம்! இளமை மாறாச் சிரிப்பு! சுறுசுறுப்பு! "என்னமாரி! எங்களை எல்லாம் அடியோடு மறந்தாயிற்றா?" என்று நான் கேட்கையில் அவன் தென்னை மரத்திலிருந்து ஒற்றைக் கையில் இளநீரோடு இறங்கிக் கொண்டிருந்தான். "இல்லைத் தம்பி! இங்கே வேலை அதிகம்!" என்று சொல்லிக்கொண்டே இளநீரை வெட்டித் தந்தான் பருகும்படி! இளநீரின் வழுக்கலை விரல்விட்டுக் கலக்கி வெய்யிலின் தாகம் தீர மாந்திக்கொண்டே கேட்டேன்: "நீ எப்படி இவ்வளவு

சுறுசுறுப்பாக ஆனந்தமாக இருக்கிறாய்?" அவன் என்னுள்ளத்தை எப்படியோ புரிந்துகொண்டு பதிலுக்குக் கேட்டான்: ''தம்பியின் கடைசிக் குழந்தைக்கு எத்தனை வயது?" ''தான் ஒரே ஒரு பையன். ஐந்து வயது'' என்றேன். ''வாழ்வு சலிக்கக் கையோடு காரணம் இருக்கிறதே! எந்த நாளும் வீட்டில் பிஞ்சுக் குழந்தையின் செல்லக் குரல் கேட்டுக் கொண்டிருந்தால் ஆனந்தமேன் குறையப் போகிறது! நீங்கள் பிள்ளையென்று பிறந்தால் அரசாங்க உத்தியோகம் பார்க்கவேண்டும் இல்லாவிட்டால் பிறக்கக்கூடாது என்று கருத்தடை மாத்திரை பாவிக்கிறீர்களாக்கும்" என்று கூலிப் பிழைப்பை நம்பிப் பிள்ளைபெற்று ஆனந்தமாக வாழும் அவன் சிரித்தபோது, மீறமுடியாத என் போலிக் கௌரவத்தை நினைத்து புழுங்கினேன் நான்!

★

## 32. ஈடிலாத் தாயன்பு!

இவளுக்கு என்மேல் அன்பு இல்லை என்பது இன்று தானே விளங்கியது. நான் அலுவலகத்தில் காலை 9 மணியிலிருந்து இரவு 7 மணி மட்டும் இடுப்பொடிய உட்கார்ந்து மூளை கொதிப்பேற வேலை செய்து மாதாமாதம் கொண்டு வந்து கொடுக்கும் என் ஐந்நூறு ரூபாச் சம்பளம் அவளுக்குப் பெரிதாகப் படவில்லை. தன் மகன் சம்பாதித்துக் கையில் கொடுத்த நூறு ரூபா மட்டும் ஏதோ பெரும் புதையல் என்று இறுமாந்து போவோர் வருவோர்க் கெல்லாம் புளுகிக் கொட்டிக் கொண்டிருக்கிறாள்!" மனம் புழுங்கிக் குமைந்து கொண்டிருந்த மார்க்கண்டு ஆத்திரந்தாங்காமல் எழுந்தார். மனைவி கற்பகத்தைத் தேடிச்சமையற் கட்டுப் பக்கமாக அவர் ஓடியதைத் தொடர்ந்து உள்ளிருந்து அவர் கூக்குரல் பலமாக ஓங்கி ஒலிக்கிறது. அடுத்து மனைவியின் விசும்பல் பெருமூச்சுக்கள், தமது ஆத்திரந் தீரக்கத்திய களைப்பில் தள்ளாடி வெளிவந்து பழைய இடத்தில் அமர்ந்த மார்க்கண்டுவின் மனம் அவர் செய்தது சரிதானா என்று தடுமாறிக் கலங்க ஆரம்பிக்கையில் ''அப்பா!



அப்பா!" என்று ஆர்வத்தோடு கூவிக்கொண்டு படலையைத் திறந்து கொண்டு ஓடிவந்து, ''உங்களுக்குக் கோட்டும் சூட்டும் 250 ரூபாவுக்கு வாங்கினேன். எப்படி என்று பாருங்கள்!" என்று பெட்டியைத் திறந்து அவரிடம் நீட்டினான் அவர் மகன் செல்வன். மகிழ்ச்சியோடும் பெருமையோடும் வாங்கிக் கொண்டவர் ''நல்லாயிருக்கடா செல்வா!'' என்று வியந்து துள்ளி விட்டு அவற்றைக் கொண்டு மனைவியிடம் ஓடினார். மனைவியின் சீதனப் பணம் 10000 ரூபா வங்கியில் இருந்தது. வருடா வருடம் அப்பணத்திற்குக் கிடைக்கும் வட்டியில் 400 ரூபாவுக்கு அவள் அவருக்கு ஒரு சோடி கோட்டும் சூட்டும் எடுத்துக் கொடுத்து அணிவித்துப் பார்த்து மகிழ்வது வழக்கம். அந்தச் சோடியிலும் இந்தச் சோடியே உயர்வாக அவர் பாசமனத்துக்குப் படவே, மனைவி கற்பகத்தை அணுகியவர் ''கற்பகம்! இதோ செல்வன் எனக்கு வாங்கினான்! நீ எடுத்துத் தந்த சோடிகளை விட நல்லாயிருக்கிறது இல்லையா?" என்று அவர் குதித்தபோது அவள் ''ஆமாங்க! ஆமாங்க" என்று அவரோடு சேர்ந்து இதய பூர்வமாக மகிழ்ந்த பெருந் தன்மைக்கு முன்னால் சற்று முன் மிருகமாக நடந்து கொண்ட மார்க்கண்டு நாணித் தலை குனிந்து எண்சாணுடம்பும் அரைச்சாணாகக் குறுகி நின்றார்.

★

## 33. மனிதப் பண்புகள்!

ஆவியுலகில் கோடி கோடி நிலவுகளின் குளிரொளியில் குளித்துக் கிடக்கும் ஆண்டவன் கொலு மண்டபம். ஒரு புறம் மனித ஆன்மாக்கள். மறுபுறம் மண்ணுலகில் ஒதுக்கப்பட்டு, வதைக்கப்பட்டு, வரும் ஏனைய விலங்குகள், பறவைகள், மீனினங்களின் நலிந்து தளர்ந்த ஆவிகள்! நடுவில் அமைந்து கிடந்த சுடரொளித் தங்கத் தவிசில் சிவன் திருமால், யேசு, அல்லா, புத்தர் இப்படிப் பல வடிவங்களில் ஏககாலத்தில் காட்சி தந்து வீற்றிருக்கிறார் அனைத்துக்கும் தலைவரான ஆண்டவன். மனித ஆன்மாக்களுக்கும்

ஏனைய உயிரின ஆவிகளுக்கும் இடையிலுள்ள பிணக்கைத் தீர்த்து வைக்கத் திருவுளங் கொண்ட பேரொளிப் பிழம்பாய இறைவன். விலங்கினங்களின் சபைப்பக்கம் ஆணை நோக்கைத் திருப்புகிறார். விலங்கினப் பிரதிநிதி ஒன்று எழுந்து நின்று "எல்லாம் வல்ல இறைவனே! கோடானு கோடி விலங்கின உயிர்களை வதைப்பதிலேயே தம்வாழ்வு, ஆனந்தம் எல்லாம் தங்கியிருக்கின்றன என்று பல்லூழிக்காலமாக அட்டூழியம் செய்து வரும் அகம் பாவக்கார மானிட அரக்கர்களை அழித்து ஒழித்து நம்மை வாழ விடும்படி வேண்டுகின்றோம்!" விலங்கினப் பிரதிநிதி அமர ஆண்டவன் மனித ஆன்மாக்கள் பக்கம் பார்க்கிறார். அடக்க ஒடுக்கமாக பணிவுடன் பத்தினிபோல் மெல்ல எழுந்துநின்ற மனித ஆன்மப் பிரதிநிதி சாஸ்திரவிதிப்படி, இலக்கண இலக்கிய மணம் வீசப் பேசுகிறது: "பல்லுலகும் படைத்தளித்துப் பரிந்தோம்பும் பரம்பொருளே உயிர்க்குலங்களுக்கு ஒரு தலைவனே! அருட்பெருங்கடலே......!" (ஆண்டவன் அலுத்துக் கொள்வதை அறிந்து) 'நாம் மனித ஆன்மாக்கள்! மனிதப் பண்புடனே எதையும் யாசிப்போம். நாங்கள் வாழவேண்டும்! விலங்குகள் ஒழிய வேண்டும்! என்று நாங்களும் வேண்டுவது பண்பன்று. எனவே நாங்களும் வாழ வேண்டும். ஏனை விலங்குகளும் பல்கிப் பெருகி...... பெருக... பெருக வேண்டும். இதுவே எங்கள் பரந்த மனப்பான்மையிலெழுந்த வேண்டுகோள்" நாவில் ஊறிய உமிழ்நீரை விழுங்கிக்கொண்டு மனித ஆன்மா அமர்கிறது. பிரபஞ்சப் படைப்பின் நோக்கத்தை இதுவரை எந்த அனுபூதிமானுங்கூடச் சரியாகக் கண்டுகொள்ளாமல் மறைத்து வைத்துக் கொண்டிருக்கும் பெருமிதத்தோடு வீற்றிருக்கும் கடவுள், மனிதனின் பரந்த மனப்பான்மையை, பண்பை நினைந்து அர்த்தப் புஷ்டியோடு சிரிக்கிறார்.



# 34. ஆனந்தக் கண்ணீர்

கவிஞர் பாண்டியனின் கவிதைகளில் மயங்கி, அவரின் இலக்கியச் சுவைததும்பும் பேச்சில் நெஞ்சைப் பறிகொடுத்து என் வாழ்வையே பறிகொடுத்த துன்பத்தின் சுவடுமறையாத மனவேதனையோடு அன்றைய தினசரியை மனம் போன போக்கில் புரட்டிக் கொண்டிருந்தேன். "பாண்டியனைப் பாட வைத்தாள்" என்ற கொட்டை எழுத்துத் தலைப்பைக் கண்டு ஆவேசத்தோடு அச்செய்தியில் விழிகளை ஓட்டினேன். "உணர்வையள்ளும் கவிதைத் தொகுதிகளும் உவட்டாதினிக்கும் காவியங்களுமாக இவ்வாண்டில் பத்து அருமையான நூல்களை இயற்றி வெளியிட்டு, இரசிக உள்ளங்களுக்கு இனிய விருந்தளித்து ஈழத்தில் எழுது கோல்பிடிப்போரின் பெருமையை, மதிப்பை உயர்த்திவிட்ட கவிஞர் பாண்டியன் அவர்கள், கடந்த ஐந்தாண்டுகளாக மணமாகி மனைவியாரின் அன்புத் தேனிற் சிறைப்பட்டு மயங்கிப் போலும் இலக்கிய உலகிலிருந்து அஞ்ஞாத வாசம் புரிந்து வந்ததை யாருமறிவர். சந்தித்த இடங்களிலெல்லாம் இலக்கிய அன்பர்கள் கவிதை எழுதுவதை அடியோடு நிறுத்தி விட்டீர்களே! தொடர்ந்தும் பத்திரிகைகளுக்கு உங்கள் பாக்களால் மணமூட்டுங்கள்!" என்று அவரை கேட்டுக் கொண்டபோதும் எழுத முடியாமல் துயர்பட்டு வந்தவர், மனித உணர்ச்சிப் போராட்டங்களை பிரச்சினைகளை உற்று நோக்கி பொங்கியெழுந்து பாமழை பொழியத் தவறியவர் இருந்தாற்போல் ஆடிப் பெருக்காக குற்றால நீர்வீழ்ச்சியாகத், தேன்மாரியாகக் கவிதைகள் புனைந்து தள்ளக் காரணமென்ன என்று வியக்கிறீர்களா?" என்று, பாண்டியனாருக்கு இலக்கிய ஆய்வுச் சங்கம் எடுத்த பாராட்டு விழாவில் சொற்பெருக் காற்றிய நொச்சியூர்க் கவிராயர் தொடர்ந்து கூறியதாவது. "அவர் கவிதைகளைக் கருத்தூன்றிப் படிப்பவர்க்கு ஓர் உண்மை புலனாகும்! அதாவது அவர்மேல் மனத்தை வைத்து நிறைவேறாத ஆசைகளின் ஏக்கங்களால், தொலைவில் எங்கோ இருந்து என்

ணும் எண்ண அலைகளால் அவர் சிந்தனையைக் கிளறி, அவர் நெஞ்சில் துக்கப் பூகம்பங்களை அடிக்கடி கிளப்பி, அவற்றைக் கவிதைகள் காவியங்களாக வடிப்பித்து, நாடறிந்த உலகறிந்த மகாகவியாக்கி, சிரஞ்சீவி இலக்கியங்களின் மூலம் அவர்க்குச் சாகாவரம் வழங்கி விட்ட ஒருத்தி எங்கோ அழுது கொண்டு இருப்பதே இந்த நல்மாற்றத்திற்கு—அரியசாதனைக்குக் காரணம். எவராலும் செய்ய முடியாத இலக்கியத் தொண்டினைப் புரிந்து தன் வாழ்வைப் பறிகொடுத்த அந்த மாதரசிக்கு இலக்கிய உலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. என்யூகம் பிழையாயிருந்தால், வெளியிட்ட விதம் தவறாக இருந்தால்கவிஞர் என்னை மன்னிக்க வேண்டும். ......" என் கண்கள் அருவிகளாயின. ஆற்றாமையாலல்ல ஆனந்தத்தால்! பெருமிதத்தால்!

★

## 35. மரணப் பிடி

வேப்ப மரத்தின் பரந்து விரிந்த நீழலில, ஓலைக் குடிசை வாயிலில் பசித்துப் பதறும் பிஞ்சு மேனியோடு துவண்டு நிற்கிறாள் கனகி. அவள் சோர்ந்த கணகள் அந்தக் கலட்டு வெளிக்கப்பால் வாழைத் தோட்டத்தி னுள்ளிருந்து தாய் வருவதைக் கண்டு விடத் தவித்துப் படபடக்கின்றன. இன்று ஏழுவயதே நிரம்பிய கனகி, வள்ளியின் வயிற்றில் இருக்கும் பொழுதே அவள் அப்பன் வைப்பாட்டி ஒருத்தியின் வீட்டில் மடங்கி விட்டான். தாயாகியதோடு பிள்ளைப் பாசத்தில் பைத்தியமாகவும் மாறி விட்ட வள்ளி உள்ளூர்த் தோட்டங்களில் கூலி வேலைக்குப் போய் இரண்டு வயிற்றுக்குக் கஞ்சி ஊற்றி வருகிறாள். நேற்றிரவு அந்த வயிறுகள் காய்ந்து கிடக்க நேர்ந்துவிட்டது. இன்று காலையிலும் குடிசையில் அடுப்புப் புகைய வழி இருக்கவில்லை. வேலை செய்யும் இடத்தில் கிடைக்கும் காலை உணவைக் கொண்டோடி வந்து தருவதாக கனகியின் கன்னத்தைத் தடவிச் சென்ற வள்ளி வருமுன் பசியில் உயிரே போய்விடும்



போல் இருக்கிறது, அவளுக்கு! அதோ கையில் உணவுச் சரையோடு வள்ளி பதைத்துப் பறந்தோடி வருகிறாள். பாதி வழிக்கு ஓடிச்சென்று சரையைப் பறித்துக் கொண்டு குடிசையை நோக்கி ஓடி வந்த கனகி தாய் திரும்பிச் சென்றதையும் கவனிக்காமல் விருட்டென்று குடிசைக்குள் நுழைந்து சரையைப் பிரிக்கிறாள். நெல்லரிசி இடியப்பம் பிஞ்சுமிளகாய்ச் சம்பல். நாவில் ஊறிப் பெருகிய உமிழ் நீரை விழுங்கிவிட்டு இடியப்பத்தை அவசர அவசரமாகப் பிய்த்து வாய்க்குள் திணித்துக் கொண்டிருக்கையில் குடிசைக்குமேலே வானத்தில ஆகாய விமானத்தின் ஒலி! அந்த ஒலி நொடிக்குள் பேரொலியாகி...... கனகி அதிர்ந்தாள். ஏதோ அபாயம் நெருங்குவதை உணர்ந்து வெளியில் ஓட எண்ணினாள். ஆனால் பசியைத் தீர்ப்பதற்காக விரைந்துண்ணும் காரியத்தை ஒரு நொடிப் பொழுதும் நிறுத்த அவளால் முடியவில்லை பசியின் கொடூர வேகத்தைத் தணிக்க ஆவாவென்று அவள் சாப்பிட்டு முடிப்பதற்குள் ஆகாயத்தில் இயந்திரக் கோளாறுக்குள்ளாகி நிலம் நோக்கி வந்து கொண்டிருந்த விமானம் அந்தக் குடிசையின் மேல் இடி முழக்கத்தோடு வீழ்ந்து தீப்பற்ற கனகியின் குரல் கீச்சொலியாக எழுந்து அடங்கியது.

★

## 36. தெரிந்தும் தெரியாமலும்!

அதோ! கீதா, மழைப்போர்வைக்குள் தன்னெழில் மேனியைப் பதுக்கிக் கொண்டு, பஸ்ஸிலிருந்து இறங்கி, அலுவலகம் நோக்கி நடந்துகொண்டிருக்கிறாள். விழிகள் படபடக்க சற்றுத் தள்ளிப் பின்னால் வந்துகொண்டிருந்த ரவியின் கால்களில் திடீரென்றொரு வேகம், பரபரப்பு! குழம்பிய உறக்கமும், கசந்த உணவும், தவிக்கும் நெஞ்சமுமாக அவனை ஆண்டாண்டாக வதைத்து வரும் கீதா அவன் மனதில் குளிர் நிலவாய் நிறைந்து நின்றாலும், பணிமனையிலோ நெருப்புப் போன்றிருப்பாள். பேச்சில், செயல்களில் எல்லாம் ஆண்மையே அணுக முடியாச் சுவாலைவீச்சு! அவளிடம் போய் நேருக்கு நேர் நின்று "நான் உன்னைக் காத

விக்கிறேன் கண்ணே கீதா!" என்று கூறுவதற்கு ரவி மட்டுமல்ல எவனுமே துணியமாட்டான். ஆகவேதான் அந்த அரிய திட்டத்தை அவன் தீட்டியுள்ளான். அதற்காக அவன் எதிர்பார்த்திருந்த சந்தர்ப்பம் வெகு அழகாக வாய்த்திருக்கிறது. ஓசைப்படாமல் வேகமாக நடந்து அவளை நெருங்க நெருங்க நெஞ்சில் ஒருவித பயம் பதைபதைப்பு இதோ அவளுக்குஇடப்பக்கமாக அருகில் வந்தும் விட்டான். "ஹல்லோ குமார்" என்று கூவிக்கொண்டு சட்டென்று ஒருகையால் அவளை இறுக அணைத்துக் கொள்கிறான், அவளென்று தெரியாதவன்போல! "யூ டாம் பூல்!" என்று திடுக்கிட்டுப் பதறுகிறாள் கீதா. மறுகணம் "பளார்!" ரவியின் இடக்கன்னத்தில் மழைநீர் தெறித்துப் பறக்கிறது. அடியின் வலி பொறுக்க முடியாமல் கன்னத்தைத் தடவிக்கொண்டு அதிர்ந்து மனமழிந்து நின்றவன் செவிகளில் "ஆ! நீங்களா...... ஐஆம் எக்ஸ்ரீம்லி சொரி!" அவளால் வாய்திறக்க முடியவில்லை. தெரிந்தும் தெரியாமலும் செய்த குற்றத்துக்கு தெரிந்தும் தெரியாமலும் தண்டனையுமா? "என்னை மன்னிப்பீர்களா?" என்ற கெஞ்சலால் அலைப்புண்டு அவள் முகத்தைநிமிர்ந்து பார்க்கிறான் ரவி! அங்கே... அவனது மௌனத்தைத் தாங்கமுடியாமல் கலங்கும் விழிகளில் அவள் இதயம் அவனுக்கு எழுதிய அடிமைச்சீட்டு கண்ணீராகப் பொங்கி நிற்கிறது.

"என் கன்னம் மட்டுமல்ல, உடம்பு, இதயம், எல்லாமே இனிக்கின்றனவே கீதா!" என்று ரவி சிரித்தபோது கீதா கன்னஞ் சிவக்க முறுவலித்து நிலம்பார்த்து நிற்கிறாள்.

★

## 37. கவலையே நீ வாழ்க!

டாக்டர் தங்கையா நோயறிகருவி மார்பில் புரள, ஒரு தடவை இதமாக நாற்காலியோடு சுழன்றாடி விட்டு நிமிர்ந்தமர்ந்த போது ஐம்பதாவது நோயாளியாக உள்ளே நுழைந்தாள் கோலூன்றிக் குனிந்து வந்த ஒரு குடுகுடு கிழவி! "வாருங்கள் பாட்டி" என்று அன்பொழுக வரவேற்று, அமர



வைத்து, களிப்புங் குதூகலமுமாக அந்தத் தோல் தொங்கும் முகத்தைப் பார்த்து, பரிவாக நோய்வினாவி, நன்றாகப் பரிசோதித்து சிறந்த மருந்துச் சீட்டெழுதித்தந்து உட்கொள்ளும் விதம்கூறி ஒரு பத்து ரூபா நோட்டை அவள் கைக்குள் அவள் மறுக்க மறுக்கத் திணித்து, "மருந்து வாங்குங்கள் பாட்டி!" என்று பரிந்த போது "தம்பீ! நீங்கள் நல்லா இருப்பீர்கள்! ராசாமாதிரி!" என்று அவன் கன்னத்தைத் தடவிவிட்டு எழுந்து அவள் வெளியே செல்ல, மேனி சிலிர்த்திருந்த தங்கையாவின் கண்கள் கலங்கலாயின.

பெற்றார் கொழும்பில் இனக்கலவரத்துக் கிரையாகிவிட, எட்டு வயதிலிருந்து யாழ்ப்பாணத்தில் பாட்டியின் பராமரிப்பில் வளர்ந்தவன் அவன். பாட்டி அப்பம் சுட்டு விற்றும், கிராமத்து வீடுகளில் கூலிக்கு மாவிடித்தும், உழுந்தரைத்தும், வீட்டில் ஆடு மாடு கோழி வளர்த்தும், அவனை மானமாக வளர்த்து பள்ளிக்கும் அனுப்பி வந்தாள். தினமும் தோட்ட வெளிக்குச் சென்று அவள் பிடுங்கி வரும் கீரையும் கூப்பனரிசிச்சோறும் அவ்வப்போது மலியும் ஒரு காய்பிஞ்சு வகையுமாக அவனுக்கு மதிய உணவு அளித்து தன் பொழுதைக் கந்தலும் கஞ்சியுமாகக் கழித்துவந்த பாட்டி, தங்கையா பெயரில் யார்க்கும் தெரியாமல் வங்கியில் பணம் கட்டி வந்தாள். முதுமையின் தளர்ச்சியிலும் அவள் கடினமாக உழைக்கக் காரணமாயிருந்த பேரனின் படிப்புத் திறமையும் முன்னேற்றமும் அவனை மருத்துவக்கல்லூரிக்குத் தெரிபடவைத்து விட்டது, பாட்டி வங்கியில் வைத்த நாலாயிரம் ரூபாவும் வட்டியும் தங்கையாவின் சிக்கனமும் மருத்துவப் படிப்பில் அவனை உயர்த்திச் சென்றபொழுது பாட்டி நோய்வாய்ப்பட்டாள். விடுமுறை பெற்று ஓடோடி வந்தவனைப் பாட்டி ஓட ஓட விரட்டி விட்டாள் படிப்பு என்ன ஆவதென்று! தங்கையா கல்லூரியில் ஏங்கி இருக்க பாட்டி அனாதையாகக் கிடந்து கண்களை மூடிவிட்டாள். தன் கண்கண்ட தெய்வத்துக்குக் கடைசிக் காலத்தில் என்றாலும் உதவமுடியாமற் போன மனத்துயரத்தோடு டாக்டராக வெளிவந்து அவள் பெயரால் ஒரு மருத்துவ நிலையத்தை நிறுவி முதியவர்களுக்கு இலவச வைத்தியம் செய்வதோடு

மிகுதி வருவாயைக் கொண்டு ஒரு வயோதிபர் நிலையத்தை யும் ஊருக்குள் நடத்தி வருகிறான் அவன். என்னதான் தன் சுகங்களைத் தியாகம் செய்து, முதியவர் தொண்டில் ஈடுபட்ட போதிலும் தன் பாட்டிக்குதவாத மனக்குறை அவனை வாட்டாமல் வாட்டும். அப்பொழுதெல்லாம் "இந் தக் கவலை வாழ்ந்தால்தான் என் தொண்டும் தொடரும்!" என்று தன்னைத் தானே தேற்றிவிடுவான் தங்கையா!

★

## 38. இடியும் மின்னலும்

மண் மங்கையின் மார்பகங்களான மலைமுடிகள் வரு ணன் நெஞ்சாம் கார் மேகங்களின் நடுவில் புதைந்து கிடந்து கிளுகிளுக்கும் மழைக்காலம்! மேனியில் பட்டுத் தழுவும் குளிர்வாடையில் உணர்ச்சிகள் நெக்கி நெகிழ்ந்து காதல் நினைவுகள் குமிழியிட, ஏமாந்த நெஞ்சம் இடியும் மின்னலுமாகத் துயர்பட கண்ணீர் மழையாகப் பொழியக் கட்டிலில் கிடந்து புரண்டாள் மேரி!

அவன் எப்படி எல்லாம் அவளோடு அன்பாகப் பேசி யிருக்கிறான். "மேரி! உன் குரலுக்கேன்டி இத்தனை இனிமை?" என்று கண்கள் கனிவான். அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்து "இதோ கன்னம் சிவக்கிறது. ஆகா! கண் சிவக்கிறது. சிரிக்கும் கன்னம் குழிவிழுகிறது! ஐயை யோ! மயிர்க்கூச்செறிகிறது! இதோ நீலமேனியில் இன்ப நடுக்கம்" என்று கொஞ்சிக் குழைந்து மகிழ்வான். "நீ ஏன்டி கள்ளி இத்தனை அழகு?" என்று உருகுவான். அவள் எச்சித் தேனீரைப் பறித்துப் பருகி "என்ன இனிமை!" என்பான். அவள் கைக்குட்டையைப் பிடுங்கி முத்தமிடுவான். எத்தனை இன்பமான நிகழ்ச்சிகள். அவள்மீது பைத்தியமாக இருந்த பஸ்தியானை அவன் பெற்றோர் அவளிடமிருந்து பிரித்துக் கொண்டு இந்தியா சென்றுவிட்டார்கள். "என் செல்லக்கிளியை எப்படியும் மூன்று ஆண்டிற்குள் வந்து அழைத்துச் செல்வேன்!" என்று கண்ணீர் வடித்துச் சென்றவனை எண்ணி எண்ணித் துடித்துக் கொண்டிருந்



தாள் அவள். அவன் அவளுடன், எப்படி வாழ்வது, பிறக் கும் பிள்ளைகளை எப்படி வளர்ப்பது என்று கலந்தாலோ சித்த சந்தர்ப்பங்களை, அவள் கண்ணீரை அவன் துடைத்து விட்டதும் அவள் தலையை அன்போடு கோதிவிட்டதுமான நிகழ்ச்சிகளை நினைக்கும்போது அவனது அன்பளிப்பான ஆயிரமாயிரம் பொருட்களைப் பார்க்கும்போது நெஞ்சில் ஏக்க இருள்சூழ்ந்து இடியும் மின்னலுமாகக் கண்ணீர் மழை பொழியலாயிற்று. மாதமொரு கடிதம் அவன் தூதாக வந்து மேரியை தலையணைக்கு முத்தமிடவும், பிச்சைக் காரரைத்தேடி உணவு அளிக்கவும் ஆறுநேரம் தேவனுக்கு நன்றி செலுத் தவும், தேவாலயம் செல்லவும் அடிக்கடி கண்ணாடியின் முன் னல் நின்று அழகுபார்க்கவும் தூண்டும்.

ஆனல் இன்று வந்த பஸ்தியானின் இறுதிக் கடிதமோ அவளைக் கிணற்றிலோ ஆற்றிலோ விழத்தூண்டுவதாக, உயிர் உள்ளவரை அவள் நெஞ்சில் இடியும் மின்னலும் ஓங்காரமிட வைப்பதாக அமைந்துவிட்டதே! ஆம் தனது பெற்றோர் இருவர் தற்கொலையைத் தடுப்பதற்காக அவர்கள் காட்டிய பெண்ணின் கழுத்தில் மாலைசூட்டிக் கொண்டு அழு தழுது மேரிக்குக் கடிதம் எழுதியிருந்தான் அவன்.

★

## 39. கண்கள் உறங்காவே!

அந்தக் காட்டில் குடிவந்திருக்கும் குடியேற்ற வாசி களின் குழந்தைகளுக்கென நடாத்தப்படும் அரசாங்கப் பாடசாலையின் தலைமையாசிரியர்தான் பொன்னுத்துரை. அப் புதிய கிராமத்தின் எல்லையில் ஒதுக்குப்புறமாய் இருந்த பாடசாலையின் மறுபுறம் அடர்ந்த காடு. தலைமையாசிரியர்க் குரிய ஜாகையில் தனியாகக் கிடந்து புரண்டு கொண்டிருந்த பொன்னுத்துரைக்கு இரவு 11 மணியாகியும் தூக்கம் வர வில்லை. ஆம்! அவர் ஆவலுடன் எதிர்பார்த்துக்கிடந்த அந் தச் சத்தம் காதில் படும்வரை அவரால் தூங்கமுடியாது. வெள்ளியென்ன; சனியென்ன! அந்தச் சத்தம் கேட்டால் தான் நித்திரை. பொன்னுத்துரை ஒரு தடவை புரண்டு

படுத்தார். பூட்டியிருந்த அவர் ஜாகைக்கு மிக அருகில் காட்டு மரங்களைச் சடசடவென யானை ஒன்று முறிக்கும் அரவம். ஆனாலும் அந்தச் சடசடப்பையும் ஊடுருவிக்கொண்டு எழவேண்டிய அந்தச் சத்தத்துக்காக அவர் செவிகளைக் கூரேற்றி வைத்துக்கொண்டு கிடந்தார். காட்டுமரத்தின் உச்சிக் கிளைகளில் குரங்குகள் சண்டை போடும் கீச்சு மூச்சு! சலசலப்புக்கள்! இடைக்கிடை வயல்களில் பன்றி, யானை, கரடிகள் நுழைந்து பயிர்களை அழிப்பதைத் தடுக்கவென நள்ளிரவின் அமைதியைக் கிழித்துக்கொண்டு அவ்வப்போது வயல்வெளிப் பரண்களிலிருந்து பயிர்க் காவலாளர் கிளப்பும் "ஹூய்! காய்! உய்யா! கூக்குரல்கள். நேரம் மணி பன்னிரண்டாகி, ஒன்றும் ஆகிவிட்டது. ஆனால் அந்தச் சத்தம் இன்னும் எழவில்லையே! பொன்னுத்துரை விரக்தியோடு எழுந்து ஒரு சுருட்டை மூட்டிக்கொண்டபோது "டுமீல்" ஆகா! அவர் ஆவலோடு எதிர்பார்த்துக்கிடந்த சத்தம்! பொன்னுத்துரைக்கு உச்சி நின்று உள்ளங்கால் வரை இனித்தது. ஆமாம்! மானோ, மரையோ, பன்றியோ முயலோ விழுந்திருக்கிறது. நாளைக்கும தவறாமல் ஒரு குடலை ஓசி இறைச்சி அவரைத் தேடிவரும். சுருட்டை வாயில் வைத்தபடியே பொன்னுத்துரை நிம்மதியாக உறங்கி விட்டார்.

★

## 40. பேச்சுப் பல்லக்கு......!

பேச்சாளர் நித்தியசீலன் சலவைசெய்யப்பட்ட ஜிப்பாவை எடுத்து மடிப்புக் குலைத்து அணிந்து கொண்டபோது மணி நாலே முக்கால்! ஐந்து மணிக்குள் போய்ச் சேராவிட்டால் மாலை மரியாதைகளோடு ஊர்வலத்தில் சென்று விழாமேடையில் ஏறும் வாய்ப்புத் தவறிவிடும் என்ற அங்கலாய்ப்பில் விரைந்து தலைவாரி, பறந்து பௌடர்பூசி, பாய்ந்து கார்க் கதவைத் திறக்கையில் "ஐயா! சாமீ!" என்ற அபசகுனக்குரல்! நரைத்துத்திரைத்து வயது எண்பதையும் தாண்டி விட்ட கூனல் கிழவன், பசியில்



உடம்பு பதற, "ஐயா சாகப்போகிறேன்... கஞ்சியைத்தண்ணியை ஊற்றுங்கையா"... என்று பொக்கை வாயால் கெஞ்சினான். "வீட்டில் யாருமில்லை அப்புறம்வா" என்ற நித்தியசீலனின் கார் புறப்பட்டுப் பறக்கலாயிற்று! கழுத்து நிறைந்த மாலைகள், காது நிறைந்த மேளதாளம், தெரு நிறைந்த மக்கள் கூட்டம், மனம் நிறைந்த பெருமிதம் – ஊர்வலத்தில் வந்த நித்திய சீலன் சொற்பெருக்காற்றும் போது "பலர் பசித்துச் சாகும் போது வேறு பலர் பணத்தை மலைபோல் குவித்து வைத்துக் கொண்டு பிச்சையிடாமல் விரட்டும் கொடுமை பண்டைத் தமிழர்களிடம் இருக்கவில்லை. அள்ளி அள்ளி ஏழைகளுக்கு வழங்கினார்கள் அன்றெல்லாம்! இன்றோ ஒரு மனிதன் தெருவோரத்தில் பட்டினியால் விழுந்து சாக ஒரு மனிதன் உப்பரிகையிலிருந்து அதை வேடிக்கை பார்க்கிறான். இப்படியான உலகைப்பார்த்துத்தான் 'தனி ஒருவனுக்கு உண்ண உணவில்லை எனில் இந்தச் சகத்தினை அழித்திடுவோம் என்று புரட்சிக்கவிபாரதி பாடினான். என்ன உலகம் இது"! என்று கூறும்போது. நித்தியசீலன் கண்களைத்துடைத்துக் கொண்டதைக் கண்டு சபையோர் உருகிப் பொருமிக் கண்ணீர் விட்டு அழுதனர்!

விழா முடிந்து 8மணியிருட்டில் காரில் நித்திய சீலன் வீடு திரும்பிப் படலைக்குள் நுழைந்தபோது பளீரென்றடித்த கார் வெளிச்சத்தில் வீட்டுப்படியில் விறைத்துக்கிடந்த ஒரு பிணம் அவர் வள்ளற் குணத்தை நினைத்துச் சிரித்துக் கொண்டிருந்தது.

★

## 41. யோ'டா?

அன்று நோன்மதிக்கு முதல்நாள். அந்த வெண்கலப் பாத்திரத் தொழிற்சாலையில் அரைநாள் வேலை முடிந்து, நான் பக்கத்து உணவு விடுதியில் நண்பகல் உணவை வயிறு புடைக்க அருந்திக் கொண்டு, பஸ்தரிப்பு நிலையத்துக்கு வந்தேன். பட்டணத்து பஸ்நிலையம் போகும் பஸ் வந்தது. பஸ்ஸில் ஏறி அமர்ந்துகொண்ட என்பார்வை வீதியோரம்

படிந்து சென்றுகொண்டிருந்தது. பட்டணத்து வீடுகள் சிலவற்றின் சுர்றுமதில்களில் "விளம்பரம் ஒட்டாதீர்" என்ற வேண்டுகோள் பொறிக்கப்பட்டிருந்தது. ஆனால் "விளம் ஒட்டாதே" என்ற அறிவித்தலே மிகப் பல வீடுகளின் சுற்று மதில்களில் தென்பட்டு என் நெஞ்சில் அருவருப்பையும் ஆத்திரத்தையும் வாரி இறைத்த வண்ணமிருந்தன. எதற்கும் ஒரு மரியாதை வேண்டாமா? விளம்பரம் ஒட்டப்படும் வீடுகளின் சொந்தக்காரர்களுக்கு எவ்வகை நட்டங்கள் ஏற்படுவதாக இருந்தாலும் விளம்பரம் ஒட்டும் தொழிலாளிகள் கொலைஞர் கொள்ளைக்கார் போன்று அத்தனை இழிந்தவர்களா? அவமதிப்புக்கு ஆளாகவேண்டியவர்களா? விளம்பரம் ஒட்டாதீர் என்று மரியாதையாக எழுதத் தெரியாமலா இப்படி எழுதுகிறார்கள்? அப்படியானால் இலஞ்சத்தாலும், சுரண்டல் சுருட்டல்களாலும் பணக்காரராகிவிட்ட இவர்களில் பெரும்பான்மையோரை எப்படி அழைக்க வேண்டும்?" என்று என் நெஞ்சு குமுறலாயிற்று.

பஸ் நிலையத்தில் இறங்கி அங்கிருந்து நான்குமைல் தூரத்திலிருக்கும் எனது ஊருக்கூடாகச் செல்லும் பஸ்ஸில் ஏறி டிக்கட் வாங்கிக்கொண்டு வசதியான இடத்தில் உட்கார்ந்த என்னை என் வயிற்றுள் விம்மிக் கிடந்த தயிரும் சோறும் உறக்கத்திலாழ்த்தியதோடு ஓர் அற்புதக் கனவையும் தொடக்கி விட்டன.

தனிமையின் ஆட்சியில் ஒரு நள்ளிரவு! வார்ணிஷ் கிண்ணமும் தூரிகையுமாக நான் நகரத்து வீதிகளில் ஓடி ஓடிப் பல மதில்களிலிருந்த "விளம்பரம் ஒட்டாதே" களுக்கு "யோ'டா"? சேர்த்து "விளம்பரம் ஒட்டாதேயோடா?"களாக்குகிறேன். என் வேலையைத் திருப்திகரமாகமுடித்துக்கொண்டு என்பாதுகாப்புக்காக நான் ஏற்பாடுசெய்திருந்தபடி என்னைப் பின் தொடர்ந்துவந்த காரில் ஏறி வீடுபோய்ச் சேர்ந்து விடுகிறேன். மறுவாரத்து இரண்டாம் நாட்காலை நான் தொழிற்சாலைக்கு பஸ்ஸில் போய்க்கொண்டிருக்கும் போது "விளம்பரம் ஒட்டாதீர்" விளம்பரங்களே நகரத்து எல்லாச் சுற்றுமதில்களிலும் காணப்படுகின்றன.

பஸ் கொண்டக்டரின் "கோயில் வாசல்"- கூக்குரல் கேட்டு உறக்கத்திலிருந்து விழித்துக் கொண்ட நான் கனவுக் குழப்பத்தோடு எனது ஊர் பஸ்தரிப்பில் இறங்கிக் கொண்டேன்.

★



# 42. பழக்கங்கள்

"சே! இப்படியே பொட்டணியிலிருந்த துணிமணிகளை மொத்தமாக அந்த வீட்டுக்காரர்கள் கேட்டபோது நான் மறுத்திருக்கக்கூடாது ஐயா! யாருக்கு 25 சதம் குறைத்து அவர்கள் கேட்டபடி கொடுத்திருந்தாலும் 50 சதப்படி இலாபம் கிடைத்திருக்கும். ஒரு பொட்டணியில் கிடைக்கும் இலாபத்தில் $\frac{2}{3}$ பங்கை ஒரு நாளில் சம்பாதித்துக் கொள்ளத் தவறி, நான் இன்று தெருத்தெருவாகக் கூவித்திரிந்தும், படலை படலையாகத் திறந்தும், ஆயிரம் தடவை புடவைகளைப் புரட்டிப் புரட்டிக் காண்பித்தும் $\frac{1}{3}$ பங்கு கூட விலைப்படவில்லை. இலாபத்தின் $\frac{1}{3}$ கூடத் தேறவில்லை" எங்கள் வீட்டுக்கு வாடிக்கையாகப் புடவைதரும் நாகேந்திரன் தொழிலிரகசியம் என்றும் பாராமல் இப்படி என்னிடங் கூறினான். அவன் கழிவிரக்கவார்த்தைகளைக் கருத்திலேற்றுக்கொண்ட நான் சிரித்துக்கொண்டே கேட்டேன். "ஏன் நாகு! இப்பொழுதும் ஒன்றும் குடிமுழுகிப் போய்விடவில்லையே! உன் பொட்டணியில் எஞ்சியிருப்பவற்றை அவர்கள் கேட்ட விலைகளுக்கே நான் வாங்கிக் கொள்ளட்டுமா? "அவன் சற்றும் யோசிக்காமல் பட்டென்று "கொடுக்கக் கட்டாது ஐயா!" என்று மறுத்துத் தயங்கினான். நான் சிரித்து விட்டுச் சொன்னேன். "பார்த்தாயா! சற்று முன்பாக எதைச் செய்யாததற்கு வருந்தினாயோ, எதைச் செய்திருக்கவேண்டும் என்று உன் விவேகம் ஒப்புக்கொண்டதோ, அதையே மீண்டும் வாய்ப்புக் கிடைத்தபோதும் நீ செய்யத் தயாராயில்லை. இதைத்தான் பழக்கம் என்பது. அதாவது மொத்தமாக வாங்கிச் சில்லறையாக விற்றுப் பழகியவன் நீ! ஆகவே மொத்தமாக வாங்கியதை மொத்தமாகவே விற்றுவிட உன் பழக்கம் அனுமதிக்காது. நீயோ இந்தப் பழக்கத்துக்கு அடிமை. நானோ இதற்கு முரண்பட்ட பழக்கத்துக்கு அடிமை. எனது தோட்டத்தில் நான் ஒன்றொன்றாக நாட்டி, ஒன்றொன்றாகப் பராமரித்து வளர்த்த இராசவள்ளிக் கிழங்குகளை ஆண்டுதோறும் அகழ்ந்தெடுத்து தோட்டத்தில் குவித்துவைத்து மொத்தமாக விற்றுச் சுளைசுளையாகப் பணம் எண்ணுவதே என்பழக்கம். முதல் கரைந்துவிடும் என்ற பயத்தால் ஒன்

றிரண்டாக அகழ்ந்து சென்று சந்தையில் விற்பதில்லை. அதன் மூலம் பத்து மடங்கு இலாபம் கிடைக்குமென்ருலும் நான் அப்படிச் செய்வதில்லை.

ஆகவே கவலைப்படாதே நாகு! இப்படியான முரண்பட்ட பழக்கங்களிலேயே உலக இயக்கம் தங்கியுள்ளது.'' என்று நான் சிரித்தபோது என்பேச்சு அவனுக்கு விளங்கியதாகத் தெரியவில்லை.

★

## 43. பட்டினித் தினங்கள்!

நவராத்திரி நோன்பின் எட்டாம் நாள். பகல் 10மணி கூட ஆகவில்லை. செஞ்சொலியின் வயிற்றைப் பசி பிடுங்கி எடுத்துப் பிய்த்துத் தின்ன, உடலெல்லாம் அசதியுடன் பதற, கால்கள் சோர்ந்து மடிய, மூளைகனன்று தலை சுற்ற, மாடிப்படிகளில் தள்ளாடி இறங்கிக் கொண்டிருந்தாள் அவள். உலக சமாதானத்துக்காக பொருளாதார விடிவுக்காக, சௌக்கியத்திற்காக மொத்தத்தில் மனித இனத்தின் நல்வாழ்வுக்காகப் பணியாற்றும் ஐ. நா. சபை பற்றிய புத்தகமொன்று அவள் கையில் இருந்தது.

பசித்தீ இத்தனை கொடியதாக எவருமே தாங்க ஆற்ருத இத்தனை கொடூரமானதாக இருக்குமென்று இது நாள் வரை அவளுக்குத் தெரியாது. தெரிந்து கொள்ளும் வாய்ப்பை, நிர்ப்பந்தத்தை குடும்பத்தின் செழித்த செல்வநிலை அவளுக்கு வைக்கவில்லை. ''பசிக் கொடுமையை அனுபவித்தறியாத என்போன்றவர்களே மலிந்த உலகத்தில் பச்சிளங் குழந்தைகள், பிணியாளர்கள், முதியவர்கள் உட்படப் பல்லாயிரக்கணக்கான ஏழைகள் பட்டினியால் துடிதுடித்துச் செத்து மடிவதில் வியப்பே இல்லை. ஐயோ! பசி எத்தனை கொடூரமானது. இந்த உண்மையை அனுபவ பூர்வமாக உலகில் ஒவ்வொருவரும் அறிந்தால் பசித்தவர்க்கு உண்டி கொடுத்து உயிர் கொடுக்கும் பணியை ஒரு முகமாகப் புரியத்தவருது உலகம். எனவே உலகில் சகலரும்



பசியின் கொடுமையை அநுபவ பூர்வமாக அறியவேண்டும். மனித இனத்தின் நலனுக்காக மனிதாபிமானத்தோடு உழைக்கும் ஐ. நா. சபை ஆண்டு தோறும் ஓரிரு தினங்களைப் பட்டினித் தினங்களாக உலக முழுமையும் அனுட்டிக்கும் வண்ணம், உலக நாடுகளைச் சட்டமியற்றும்படி கோரவேண்டும். இம்முயற்சியில் அந்த நிறுவனம் ஈடுபட்டுழைத்து வெற்றிபெற வைக்கும்வரை நான் ஓயப்போவதில்லை" என்று எண்ணிக்கொண்டு, கருணைக் கடலான அன்னை பராசக்தி பேரிலான நோன்பின் மகத்துவத்தை வியந்தபடி நிதானமாகத் திரும்பி தன் படிப்பறை நோக்கி மாடிப்படிகளில் ஏறிக்கொண்டிருந்தாள் செஞ்சொலி.

★

## 44. அந்த ஒரு சொல்!

ஜன்னற் கம்பியை வளைத்துப் பிடுங்கிவிட்டு அறைக்குள் ஓசைப்படாமல் குதித்துக் கதவை நோக்கி, அந்தக் கும்மிருட்டில், நகர்ந்து கொண்டிருந்த அந்த மலைபோன்ற உருவத்தை, கட்டிலிற் கிடந்தபடி ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து சாய்த்துக் கட்டிலோடு நசித்துப் பிடித்துக்கொண்டார் மரியதாஸ். அந்த உருவம் பலங்கொண்ட மட்டும் திமிறிப்பார்த்துவிட்டு மதயானைபோன்ற மரியதாஸின் பிடியில் சோர்ந்து அடங்கிவிட்டசமயம், எதிரே சுவரில் கிடந்த மின்விளக்குப் பொத்தானை சட்டென்று ஒருகையால் அமுக்கிவிட்டு மீண்டும் ஆளைப்பற்றிக்கொண்டார் அவர். ஒருவர் முகத்தை ஒருவர் மின் விளக்கு வெளிச்சத்தில் பார்த்துக்கொண்டனர். தவிப்பும் வெட்கமுமாகப்பதறி விழித்த அந்த மூகத்தைக் கனிவோடுபார்த்தார் மரியதாஸ். மறுகணம் திடீரென்று கையைவிட்டெழுந்து சற்றுப் பின் தள்ளி நின்றுகொண்டவர், ''மாணிக்கம்! எழுந்து அமருங்கள்" என்று நண்பனைப்போல் அன்பு பொங்க வேண்டினூர். மாணிக்கத்துக்கு அதிர்ச்சி தாங்கவில்லை. ''அடே மாணிக்கம் போடா, வாடா" என்ற அவமதிப்பு அழைப்புக்களையே வாழ்நாளெல்லாம் கேட்டுப் பழகிய மாணிக்கத்துக்கு அவன் வாழ்வில் முதல் முறையாக மதிப்புக் கொடுத்து, அதுவும் கொள்ளை

யடிக்கும் நோக்கத்தோடு திருட்டுத் தனமாக வீடு புகுந்த சந்தர்ப்பத்தில் "எழுந்து அமருங்கள்" என்று வீட்டுக்காரனே அன்போடு சொல்வதென்றால்......? எழுந்த மாணிக்கம் மறுகணம் மரியதாஸின் காலடியில் நெடுமரமாக வீழ்ந்து அவர்கால்களைக் கட்டிக் கொண்டு விம்மினான். மரியதாஸ் அன்போடு அவனை எடுத்து நிறுத்தி மார்புறத் தழுவிக்கொண்டார். மரியதாஸின் முதுகுப் புறத்தில் மாணிக்கத்தின் கண்ணீரும், அவர் மார்புப் புறத்தில் அவன் பற்றிய கடந்தகால ஞாபகங்களும் ஓடலாயின.

ஒரு வருடத்துக்கு முன்னர் மரம் அரியும் ஆலையொன்றில் வேலை செய்தவன் மாணிக்கம். ஒருநாள் ஏதோ தகராறில் ஆலை முதலாளி அவனைத் தாக்கப் புகுந்தபோது மாணிக்கம் அவனை நையப் புடைத்து விட்டான். அதனால் 6 மாதம் சிறைத்தண்டனை அனுபவிக்க நேர்ந்து, விடுதலையானதும் வேலை தேடித் தெருத் தெருவாகத் திரிந்தான் அவன். யாரும் துணிந்து அவனுக்கு வேலை கொடுக்கவில்லை. சமூகத்தின் அச்சமும், அலட்சியமும், வயிற்றுக் கொடுமையும் சமூகவிரோதிகளின் பட்டியலில் அவனையும் சேர்த்து விட்டது. ஆம் அவன் திருடத் தொடங்கிவிட்டான்.

"மாணிக்கம் நான் பயிரிடும் ஐயாயிரம், கன்று தோட்ட நிலத்தில் ஓராயிரம் கன்று நிலத்தைக் குத்தகைக்கும் 500ரூபா கைமுதலைக் கடனாகவும் தருகிறேன்" என்று மரியதாஸ் சொல்லிமுடித்தபோது மாணிக்கம் மீண்டும் அவர்கால்களில் விழமுயன்று கொண்டிருந்தான்.

★

## 45. மானங்காக்கும் மண்

தமிழ், சிங்களம் முதலிய நம்நாட்டு மொழிகள் ஒவ்வொரு பாடமாக மட்டுமே ஈழத்துப் பள்ளிக்கூடங்களில் படிப்பிக்கப்பட்டுவந்த வெள்ளையராட்சிக் காலம் அது. அந்த நாளைய கல்லூரி ஒன்றில் சிரேட்ட வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான் சின்னத்தம்பி. அன்று ஆங்கிலப் பாட



நேரம், "ஆங்கிலக் கல்வியின் அவசியம்" என்ற தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதும்படி பணித்த ஆங்கிலபாட ஆசிரியர், ஒவ்வொரு மாணவனையும் ஒவ்வொரு குறிப்புக் கூறும்படியும் கட்டளையிட்டார். எல்லா மாணவர்களுக்கும், எ ஆங்கிலம் படித்தால் அரசாங்க உத்தியோகம் பெறலாம்' ை"ன்ற பல்லவியை மட்டும்தான் பாடத் தெரிந்திருந்தது. சின்னத்தம்பி மட்டும் மௌனமாக இருந்தது கண்ட ஆசிரியர் 'என்ன! ஆங்கிலப்புலி அடக்கமாக இருக்கிறது!" என்று அவனைச் சீண்டினார். மெல்ல எழுந்து நின்ற சின்னத்தம்பி "ஆங்கிலம் உலகமொழியாதலாலும், உலக இலக்கியங்களையும் அறிவியல் நூல்களையும் வேண்டிய அளவு படித்தறிய ஆங்கில மொழி ஒன்றைப் படித்தாலே போதுமாதலாலும், நம்மருந்தமிழ் மொழியில் பல இலக்கிய, விஞ்ஞான நூல்களை மொழிபெயர்க்கலாமாகையாலும், சகலதுறைகளிலும் வளர்ச்சிபெற ஆங்கில அறிவு அவசியம் ஆதலாலும், தன்மானம் உள்ளவர்களும், பூமியில் எவர்க்கும் அடிமைசெய்து கஞ்சிகுடிக்க விரும்பாதவர்களும் ஆங்கிலத்தைக் கற்கலாம்" என்று குத்தலாக மொழிந்து அமர்ந்தான். ஆங்கிலத்தைப் பள்ளியில் பயின்றதோடு தமிழிலக்கண இலக்கியங்களையும் வீட்டில் அனுபவித்துப் படித்து மகிழ்ந்த சின்னத்தம்பி, பள்ளிப் படிப்பு முடிந்ததும் தேசத்து மொழிகளை, மதங்களை, கலை கலாச்சாரங்களை, நம்பிக்கைகளை, தனித் தன்மைகளை மதிக்காமல் தேசமக்களை அடிமை கொண்டு ஆண்ட ஆங்கில அரசுக்குத் தொண்டு செய்ய நினைக்கவில்லை. முதுசொம்மாகக் கிடைத்த 2 ஏக்கர் வயல் மண்ணில் மாடாக உழைத்ததன் மூலம் பெருவாரி நிலங்களுக்குச் சொந்தக்காரனாகவும், ஓய்வு நேரங்களைப் புத்தகங்களுடனும், இல்லற வாழ்விலும் செலவிட்டதற்குப் பலன் பேரறிவாளனாகவும், ஐந்து பிள்ளைகளுக்குத் தந்தையாகவும் மாறிவிட்டான். தான்தேடிய விளை நிலங்களைப் பங்கிட்டளித்தும், தான் பயின்ற நூல்களைப் பங்கிடாதளித்தும், தன் பிள்ளைகளுக்குக் கூறிய அறிவுரை "என் மொழியை. என் மதத்தை, கலை கலாச்சாரங்களை இகழ்ந்தவர்களிடம் கையேந்திப் பிழைக்காத வண்ணம் என் தாய் தந்தையர் தேடிவைத்த நிலபுலங்கள் என்னைக் காத்தன. நான் தேடிவைத்தவைகள் உங்களை அந்த அவமானத்திலிருந்து காப்பாற்றும். இனி நீங்கள் தேடிவைக்கும் நில புலங்கள் உங்கள் பிள்ளை குட்டிகளையும் தன்மானத்தோடு வாழவைக்கப் போதுமானவையாக இருக்கவேண்டும்" என்பதுதான்.

★

# இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு 1000 ரூபா பெற்ற

# "எழிலி" பற்றி இலக்கிய ஏடுகள் கூறியவை.

நல்ல கவிதைகள் பல தீட்டி, இலக்கிய இரசிகர்களின் உள்ளங்களைக் கவர்ந்து வரும் திரு. ச. வே. பஞ்சாட்சரம் நூல்வடிவில் வாசகர்களுக்குச் சமர்ப்பித்துள்ள எழிலி எனும் இக்காவியம் படித்து மகிழத்தக்கதாக அமைந்துள்ளது.

—தினகரன்

கவிதைகளில் வர்ணனைவளமும் உவமைச் சிறப்பும் நன்ருக ஒளிர்கின்றன. கவிதைகள் அவ்வவ்விடங்களுக்குத் தக்கவாறு பொருத்தமான சந்தங்களேற்றுக் கலகலப்பாக இருக்கின்றன. சில கவிதைகளில் பாவத்தைப் படக்காட்சி போன்று சித்தரிப்பதில் வெற்றி கிட்டியிருக்கிறது.—வீரகேசரி

கவிதைக்கேற்ற கற்பனைச் சிறப்பும், இயற்கை வருணனை மூலம் இதயக் குமுறலும் சொல்லப்பட்டிருக்கும் முறைமை தராதரம் பெற்ற கவிஞனுக்கே கைவரக்கூடியது.

— சுதந்திரன்

கவிஞர் பஞ்சாட்சரத்தின் எழிலி, யாப்பு அணி பழைய மரபு முதலியவை மாருமல் இருந்த போதிலும் நிலைக்களங்களிலும் சம்பவங்களிலும் ஒரு நவீன முறையை ஏற்படுத்தியிருப்பது பாராட்டத்தக்கது. —விவேகி

உணர்ச்சிக்கேற்ற வகையில் பலதரப்பட்ட சந்தங்களில் இயற்றி, கவிதையின் இதயத் துடிப்பான ஓசை ஒழுங்கையும் ஒருமைப்பாட்டையும் சிறப்பாகச் செய்திருக்கிருர்,

—செய்தி



பல புதிய உவமைகளைக் கையாள்வதன் மூலம் எழிலியை அழகு படுத்துகிருர் கவிஞர்.

கவிதை நடையைப்பார்க்கும் போது அவரின் 'பொலிந்த கவித்துவம்' புலனுகின்றது. — இந்துசாதனம்

இக்கவிஞரின் காப்பியத்தை உயர்தரவகுப்புத் துணைப் பாட நூல்களுள் ஒன்ருய் ஆக்கி மேன் மேலும் இப்பணியில் ஊக்குவிப்பது தமிழறிஞர் கடன். — உதயதாரகை

S. V. Panchadcharam the winner of the Tamil Poetry Award has published two Collections of poems before the present volume ELILI. Radio broadcasts of his poems and hundreds of newspaper publications are among the other achievements to Panchadcharam's credit

—Daily News

---


## விற்பனையாகின்றன

ச. வே. பஞ்சாட்சரம் எழுதிய

எழிலி ரூபா 1-00

தண்டலை „ 1-50

0052-08



# வெளிவருகின்றன!

திரு. ச. வே. பஞ்சாட்சரம் அவர்களின்

## பனிமலைப் பாட்டு

(மலையக மக்களின் விடிவு நோக்கி எழுந்த 50 கவிதைகள்)

## இன்பச் சிரிப்பு

(இலங்கை இந்தியப் பத்திரிகைகளில் வெளிவந்த 100 கவிதைகள்)

## பாடினி

## பாப்பா பாடும் பாட்டு

## பூங்கொடி போய்விட்டாள்!

(வறுமை ஒருபுறம், மங்கையொருத்தியின் மறுத்தும் மழுங்காக் காதல் மறுபுறம், இடையில் ஏற்றத் தாழ்வுகள் போட்டி பூசல்கள் இவற்றினிடையே சிக்கிக் கலங்கும் ஒரு வேலையற்ற பட்டதாரி மாணவனின் உணர்ச்சிப் போராட்டங்களை உருக்கமாகச் சித்தரிக்கும் சீர்திருத்த நாவல்)

## சின்னஞ்சிறு கதைகள்

(50 கதைகள் அடங்கிய இரண்டாம் தொகுதி)

## இளந்துறவி

(அழகுத் தமிழில் ஓர் ஆத்மீகக் காவியம்)

## நிலவுப் பூக்கள் (கவிதைகள்)

வெளியிடுபவர்:

**பொ. சண்முகநாதன்**

பொன்னெழுத்துப் பதிப்பகம்

மருதனார்மடம்,

உடுவில்


EARLALAI WEST
CHUNNAKAM

18/4/86



## ச. வே. பஞ்சாட்சரம்

பலநூறு கவிதைகளை இலங்கை இந்தியப்
பத்திரிகைகளில் எழுதியவர்
பல கவியரங்குகளில் பங்குபற்றியவர்
பத்தாண்டு காலமாக இலக்கியப்
பணிபுரிந்து வருபவர் கலைச்செல்வி இந்துசாதனம்
பத்திரிகைகளில் பணியாற்றியவர்
பத்துக்கு மேற்பட்ட நூல்களை ஆக்கியவர்
பத்துக்கும் அதிகமான இலக்கியப் போட்டிகளில்
பரிசில்களும் பாராட்டும் பெற்றவர்
பண்டிதப்பட்டம் பெற்றவர்.
பயிற்றப்பட்ட தமிழாசிரியர் – புசல்லாவ
பரி திருத்துவக்கல்லூரியில் கடமையாற்றுபவர்
பக்தி பழமையிலும்
பாசம் புதுமையிலும் கொண்டவர். இலக்கியப்
பரிசோதனைகளை வரவேற்பவர். கவிதைச் செல்வம் மூலம்
பல இளங்கவிஞர்களை அறிமுகப்படுத்தியவர்.
பாகு பாடகற்றி ஈழத்தமிழ் இனத்தை
பலமிக்க புகழ்மிக்க சமுத்தாயமாக்கவும்
பழந்தமிழர் பெருமைகளைப்
பாரறியச் செய்யவும்
பாடுபவர் பாடுபடுபவர்
பழக இனியவர்
பார்வைக் கெளியவர்
பஞ்சாட்சரம்.

புசல்லாவ

—குறிஞ்சிநாடன்